# உத்தமனாகிய எஸ்றா



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர் M.A., D.D.,

# உத்தமனாகிய
# எஸ்றா

ஆசிரியர்

திருமறை அறிஞர்

**Rev. Dr.A. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்

**விண்ணக அப்பம்**

2, நேருவீதி, சூரம்பட்டி,

ஈரோடு - 638 009. தென் இந்தியா


FIRST EDITION - APRIL - 2006

RE EDITION - AUGUST - 2015

TOTAL COPIES - 2000



COPY RIGHT - WINNAGA APPAM



PRICE - Rs. 40.00 (IN INDIA)

BOOK NUMBER - T 51



FOR DETAILS CONTACT

**WINNAGA APPAM**

NO.4/2, NEHRU STREET, SOORAMPATTI,

ERODE – 638 009. S.INDIA

PHONE : (0424) 2271323 (OFF), (0424) 2277286

CELL : 94434 99486, 94434 99487

E-mail : winnagaappam@rediffmail.com

# அணிந்துரை

**திருமறைப் பெரியார்**
**மறைதிரு. யோபு ஞானப் பிரகாசம்**
நிறுவனர்
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்,
கோயம்புத்தூர் - 12.

தனது அருள் உரையாலும், எழுத்தாலும், எண்ணற்ற உள்ளங்களை ஆற்றி, தேற்றி, மாற்றிவரும் டாக்டர். கிறிஸ்டோபருக்காய் கர்த்தரை துதிக்கிறேன். கடந்த ஆண்டு இவரது 50வது நூலை ஜெபித்து வெளியிட்டேன். இந்த 51வது நூலிற்கு வாழ்த்தி, அணிந்துரை வழங்குவதில் கர்த்தருக்குள் மகிழ்ச்சி அடைகிறேன்.

புதிய சிந்தை, புதிய வெளிப்பாடு, புதுமையான வார்த்தைகள், புது புது தகவல்கள் இவைகளெல்லாம் இவருக்கே உரிய தனி உடமை, எண்ணற்ற இல்லங்களிலும், உள்ளங்களிலும் தனது நூல்களால் புதிய விழிப்பையும், எழுப்புதலையும் வரசெய்த இவர். எஸ்றா என்கிற இந்த நூலை வெகு அழகாக, அதே சமயம் அடிப்படையான சத்தியங்களை தெளிவாக விவரித்து எழுதி இருக்கிறார்.

எங்கள் ஐ.பி.ஏ. ஸ்தாபனத்தில் உள்ள முதிர்ந்த ஊழியர்களில் ஒருவரும், ஈரோடு மண்டல சபைகளின் கண் காணிப்பாளருமாகிய இவர் மிகச்சிறந்த வேத பண்டிதர். பழக இனிமையானவர். எவருக்கும் அஞ்சாமல் எந்த சூழ்நிலையிலும் வசனத்திற்காய் வைராக்கியமாய் நிற்கும் வலுவான உள்ளம் உள்ளவர். இந்த நூல் உங்கள் வாழ்வினை புத்துணர்ச்சிக்குள்ளும், புதிய பிரதிஷ்டைக் குள்ளும், புதிய அத்தியாயத்திற்குள்ளும் உங்களை நிச்சயம் நடத்தும் என்று விசுவாசித்து ஜெபத்துடன் இஃதினை பரிந்துரை செய்கிறேன்.

- ஆமென்.



# என்னுரை

என் இனிய வாசகர்களே !

இரட்சகரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த நூலை மிகுந்த மனநிறைவுடன் உங்களுக்கு அளிக்கிறேன்.

ஆதியாகமத்தில் இருந்து ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களை பற்றியும், யாத்திராகமம் முதல் உபாகமம் வரை உள்ள புத்தகங்களை மையமாக வைத்து மோசே, ஆரோன் பிலேயாம், மகிமையின் கூடாரம் என்ற புத்தகங்களை அளித்தேன்.

அப்படியே யோசுவா, நியாயாதிபதிகளாகிய சிம்சோன், யெப்தா, கிதியோன் என்பவர்களை பற்றியும் ரூத் பற்றியும் எழுதினேன். தொடர்ந்து 1 சாமுவேல் முதல் நாளாகமம் வரை உள்ள புத்தகங்களில் இருந்து தாவீது, எலியா, எலிசா ஆகிய புத்தகங்களையும் அடுத்து நெகேமியா, எஸ்தர், யோபு என்ற புத்தகங்களையும் அளித்தேன்.

ஒன்றை கவனித்தீர்களா? எஸ்றா மாத்திரம் விடுபட்டு விட்டது. எனவேதான் எஸ்றாவை எழுகிறபோது வேதத்தை வரிசையாக விவரிக்கிறோம் என்ற திருப்தி எனக்கு ஏற்பட்டுள்ளது.

சொன்னதை செய்கிறவர், செய்கிறதை சொல்கிறவர் நமது ஆண்டவர் என்பதை நமக்கு விவரிப்பது எஸ்றா.

அவரை விட்டு திரும்பினால், சிறையிருப்பு. அவரிடம் திரும்பினால் மன்னிப்பு என்பதை தெளிவாக படம் பிடித்து காட்டுவது எஸ்றா.

வரலாற்று பின்னணியோடு வாழ்வியல் குறிப்புகளையும் வகுத்து தொகுத்து அளித்து இருக்கிறேன்.

**வாசியுங்கள் - யோசியுங்கள் - நேசியுங்கள்**

இவண்,
அன்பரின் பணியில்,
**அ. கிறிஸ்டோபர்.**

## படைக்கிறேன்

| | | |
|---|---|---|
| செய்வதையே | சொல்பவர் | நீர் |
| சொல்வதையே | செய்பவரும் | நீர் |
| | | |
| அரவணைக்கும் | தெய்வம் | நீர் |
| அடிக்கும் | தெய்வமும் | நீர் |
| | | |
| கண்டிக்கும் | தெய்வம் | நீர் |
| தண்டிக்கும் | தெய்வமும் | நீர் |

| | | | |
|---|---|---|---|
| பாபிலோனிய | சிறையிலிருந்து | யூதரை | மீட்டீர் |
| பாவலோக | சிறையிலிருந்து | என்னையும் | மீட்டீர் |
| பல்வேறு | சிறையிலிருந்து | படிப்போரை | மீட்டிடவே |
| பரமனே | சிரம்தாழ்த்தி | படைக்கிறேன் | இந்நூலை |

இவண்

**அ. கிறிஸ்டோபர்**



## பொருளடக்கம்

### அதிகாரம்


1. எஸ்றா – ஓர் அறிமுகம் !
2. கொடுக்கும் கோமான்கள் !
3. கெடுக்கும் குழிநரிகள் !
4. திடப்படுத்தும் தீர்க்கதரிசிகள் !
5. செயல் வீரன் செருபாபேல் !
6. உத்தமனாகிய எஸ்றா !
7. எஸ்றாவில் கர்த்தரின் கரம் !

# 1

## எஸ்றா – ஓர் அறிமுகம்

**விடுதலை முழங்கிடுவோமே விக்கினம் யாவும் அகலும்**
**இடுக்கண்கள் சூழ்ந்திடும் வேளை**
**இரட்சகன் மீட்பருள்வாரே**
**சிறைவாழ்வு மறையும் சீர்வாழ்வு மலரும்**
**சீயோனின் மகிமை திரும்பும்**

என்ற நம்பிக்கை வரிகளுடன் இந்த புத்தகத்தை துவங்குகிறேன். இது ஏன் நடந்தது என்ற கேள்வியா? இது எப்படி நடக்கும் என்ற திகைப்பா? என்று நடக்கும் என்ற வியப்பா? யார் மூலம் நடக்கும் என்ற மலைப்பா? கவலையை விடுங்கள். உங்களுக்கு உணர்வூட்டும், உவகையூட்டும் உன்னதமான செய்தி இந்நூலில் காத்திருக்கிறது.

என்னை சுற்றி மாறுபட்ட உலகம், வேறுபட்ட மனிதர்கள், கூறுபட்ட என் குடும்பம் இப்படியிருக்க எனக்கு உதவி எப்படி வரும்? பதவி எப்படி வரும்? என்று நீங்கள் கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டு, எஸ்றா புத்தகத்தை வேதத்தை திறந்து வாசித்துப் பாருங்கள் வியந்து போவீர்கள்! விசுவாசத்தில் வீரியம் கொள்வீர்கள்!

யூதர்களின் மறுவாழ்விற்கு தேவாலயத்தின் கட்டுமானத் திற்கு உதவி செய்தவர்கள் யார் தெரியுமா? கோரேஸ், தரியு, அர்தசஷ்டா என்ற பெர்சிய மாமன்னர்கள், அதாவது தேவனை அறியாத புறஜாதி மாமன்னர்கள். என் அருமை வாசகர்களே!



எல்லா கதவுகளும் அடைக்கப்பட்டு விட்டதே. தேவனை அறியாதவர்கள் ஆள்கிறார்களே. ஆலயம் கட்ட முடியுமா? ஆன்மீகத்தில் தழைக்க முடியுமா? என்ற ஆகாத கேள்விகளை தூக்கி எறியுங்கள். ஆண்டவரின் மகிமையை நோக்கிப் பாருங்கள். அவர் யார் தெரியுமா? பட்சிக்கிறவர். அவர் யார் தெரியுமா? ராஜாக்களின் இருதயத்தை தமது கரத்தில் வைத்திருப்பவரும், அதை நீர்க்கால்களைப்போல தமது சித்தத்தின்படி திருப்பவும் வல்லவர்.

இதோ, என் வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய் நம்புங்கள். தேவன் எந்த நாளும் கோபமாய் இருக்கமாட்டார் அடிக்கிறவரும் அவரே, காயங்கட்டுகிறவரும் அவரே, சிறைக்குள் அனுமதிக் கிறவரும் அவரே. சிறையிருப்பிலிருந்து திருப்புகிறவரும் அவரே கண்ணீரைத் துடையுங்கள்.

இந்த புத்தகத்தில் எஸ்றா ஆகமத்தை விவரமாக ஆராயப் போகிறோம். அதில் என்ன கிடக்கிறது என்று நீங்கள் கேட்டு விடக்கூடாது. சில சம்பவங்களையும், சரித்திரங்களையும் நீங்கள் நிச்சமாய் அறிந்து வைத்திருக்க வேண்டும் இல்லா விட்டால் உபதேசத்திலும் உலக வாழ்விலும் விழுந்து போவீர்கள். சோர்ந்து போவீர்கள்.

சாலமோன் தேவாலயத்தைக் கட்டினான் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இருந்த தேவாலயம் யாரால் கட்டப்பட்டது என்று பலருக்கு தெரியாது. தேவாலயம் எத்தனை முறை இடிக்கப் பட்டது என்றும், எத்தனை முறை புதுப்பிக்கப்பட்டது என்றும் நீங்கள் அறிந்து கொள்ள இந்த புத்தகத்தை நீங்கள் படித்தே ஆக வேண்டும்.

யாக்கோபின் காலத்தில் எகிப்துக்குப் போய், பின்னர் அடிமையாகி, மோசேயின் காலத்தில் விடுதலையாகி கானானை சொந்த நாடாகப் பெற்றுக்கொண்டார்கள் என்று எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் இந்த இஸ்ரவேலர் சொந்த நாட்டை இழந்து விட்டு அந்நிய நாட்டிற்கு சிறைபட்டு போனார்கள் என்றும் திரும்பசொந்த நாட்டை எப்படி பெற்றார்கள்? இப்படி எத்தனை முறை நடந்தது என்று நம்மில் பலருக்குத் தெரியாது இந்த விவரங்களை அறிந்து கொள்ள இந்த புத்தகத்தை நீங்கள் அவசியம் வாசித்தே ஆக வேண்டும்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட அந்த மாபெரும் புறப்பாட்டை விவரிப்பது யாத்திராகமம். அவர்களின் சிறையிருப்பிலிருந்து திரும்பின இரண்டாம் புறப்பாட்டை விவரமாக எடுத்துச் சொல்வது எஸ்றாவின் ஆகமம். இந்த விவரங்களை நீங்கள் அறிய, இந்த புத்தகத்தை நீங்கள் வாசித்தே ஆக வேண்டும்.

எஸ்றா புத்தகம் ஒரு அறிமுகம் :

அறுபத்தாறு ஆகமங்களைக் கொண்ட திருமறையில் பதினைந்தாவது புத்தகமாக இருப்பது இந்த ஆகமம். பத்து அதிகாரங்களையும் 280 வசனங்களையும் கொண்ட இந்த ஆகமம் இஸ்ரவேலரின் வரலாற்றின் முக்கிய நிகழ்வை தெளிவாக நமக்கு எடுத்துச் சொல்கிறது. தேவன் தாமே வாக்கு பண்ணினதையும் தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு சொன்னதையும் நிறைவேற்றுவதற்கு எவ்வளவு உண்மையும், தீவிரமும் உள்ளவர் என்பதை புள்ளி விவரமாகக் கூறுவது இந்த புத்தகம்.

யோசுவா முதல், நாளாகமம் வரை உள்ள ஒன்பது புத்தகங்கள், இஸ்ரவேலர் கானானை எப்படி சுதந்தரித்துக் கொண்டார்கள் என்பதையும், எப்படி சுயாதீனமாய் வாழ்ந்தார்கள் என்பதையும், எப்படி சோரம் போனார்கள் என்பதையும், எப்படி சிறைபட்டுப் போனார்கள் என்பதையும் நமக்கு மிக விவரமாக சொல்வது போலவே, போனவர்கள் எப்படி திரும்பி வந்தார்கள் என்றும், அவர்கள் வாழ்வின் மறுமலர்ச்சியை நமக்குச் சொல்வது இந்த புத்தகம்.



## ஆசிரியர் யார் :

இந்த புத்தகத்தை எழுதியது யார் என்று வெளிப்படை யான ஆதாரம் ஏதும் இல்லை. இந்த ஆகமத்தில் முக்கிய பாத்திரமாக கருதப்படுகிற ‘‘எஸ்றா’ வின் பெயர் இப்புத்தகத் திற்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை வைத்துக்கொண்டு எஸ்றா தான் இதை எழுதினார் என்று நாம் சொல்லிவிடக்கூடாது. அது மோசமான முன் உதாரணமாகிவிடும். அப்படி கணக்குப் போட்டால் ரூத் புத்தகத்தை ரூத்தும், எஸ்தர் புத்தகத்தை எஸ்தரும் எழுதினார்கள் என்று ஆகிவிடுமல்லவா?

அப்படியானால் யார் தான் எழுதியது? என்று நீங்கள் அவசரப்படுவது எனக்கு புரிகிறது. எஸ்றாதான் இதை எழுதினார் என்று எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள் எஸ்றா இந்த புத்தகத்தை எழுதினார் என்பதற்கு புறசாட்சிகள் இல்லாமற் போனாலும் அக சாட்சி நமக்கு அழுத்தமாக கிடைக்கிறது.

எஸ்றா புஸ்தகத்தை இரண்டு பிரிவாக பிரிக்கலாம். முதல் ஆறு அதிகாரத்தை எஸ்றாவின் எருசலேம் வருகைக்கு முந்தின பகுதி என்றும், பிந்தின நாலு அதிகாரத்தை எஸ்றாவின் எருசலேம் வருகைக்கு பிந்தின பகுதி என்றும் பிரிக்கலாம்.

நீங்கள் எஸ்றா ஆகமத்தை நன்றாக வாசித்துப் பார்த்தால் நிகழ்ச்சிகளை படர்க்கையில் (திர்த் பெர்சொன்) பதிவு செய்துள்ள இதன் ஆசிரியர் பிந்தின நாலு அதிகார சம்பவங்களை தன்னிலையில் (பிர்ச்த் பெர்சொன்) எழுதியிருக்கிறார். இதை வைத்துப் பார்க்கும்பொழுது இந்த புத்தகத்தை எஸ்றாதான் எழுதியிருக்க வேண்டும் என்று புலனாகிறது.

உங்களுக்கு நேரம் கிடைக்குமானால் ஐஐ நாளாகமத்தில் கடைசி அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களையும், எஸ்றா ஆகமத்தில் முதல் அதிகாரம் முதல் நான்கு வசனங்

களையும் வாசித்துப் பாருங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இரண்டும் ஒன்றுபோலவே இருக்கும். அதாவது நாளாகமத்தை எழுதிய வரலாற்று ஆசிரியரே அதன் தொடர்ச்சியாக எஸ்றாவை யும் எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது. நாளாகமத்தை வேதபாரகனாகிய எஸ்றா தான் எழுதினார் என்று ஆதாரங்கள் இருப்பதினால், இந்த ஆகமத்தையும் அவரே தான் எழுதினார் என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

இன்னொரு விஷயம் தெரியுமா உங்களுக்கு பழைய ஏற்பாட்டின் எல்லா ஆகமங்களையும் ஒன்று சேர்த்தவர் எஸ்றா என்றும் இப்போதிருக்கிற பழைய ஏற்பாட்டு வரிசைக் கிரமத்தை உண்டாக்குவதற்கு எஸ்றாதான் காரணம் என்றும், சிறைத்திரும்பின பிறகும் எருசலேமில் அதிக முக்கியம் வாய்ந்த ஜெய ஆலயம் தோன்றுவதற்கு எஸ்றாவே காரணம் என்று யூத பாரம்பரியங்கள் கூறுகின்றது.

அக்காலத்தில் யூதர்கள் மத்தியிலிருந்த ‘‘அரமாயிக் மொழியின் ஆதிக்கத்தையும், அரசாணைகளின் உண்மை நகல்களையும், ஆசாரிய வம்ச குடும்ப அட்டவணையையும் மிகத் தெளிவாக எஸ்றா ஆகமத்தில் எழுதப்பட்டிருப்பதைக் காணும்போது அரசரிடத்தில் செல்வாக்கு பெற்றிருப்பவரும், ஆசாரியனுமாயிருந்த எஸ்றாவே இஃதினை எழுதியிருக்க வேண்டும் என்பது மேலும் உறுதிப்படுகிறது.

மேலும் உங்களுக்கொரு போனஸ் செய்தி, எஸ்றா தன் காலத்திலே எருசலேமிலே மிகப் பெரிய வேத அறிஞராக திகழ்ந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் பல்வேறு துறைகளில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தார்கள் என்பது நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டிய விஷயம்.

இந்தியாவில் வாழ்ந்த கௌதம புத்தர், சீனாவில் வாழ்ந்த தத்துவஞானி கன்பூசியஸ், கிரேக்கத்திலிருந்த தத்துவ ஞானி



சாக்ரடீஸ் ஆகியோர் எஸ்றாவின் சமகாலத்தவரே. இவர்கள் எல்லாரையும் விட எஸ்றா மிஞ்சி நிற்கிறார். காரணம் அவர் தெய்வீக ஞானியாகவும், ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஆதாரமாகவும் திகழ்ந்தார். வேத புத்தகத்திலே மிக நீண்ட பகுதியாகிய 119ம் சங்கீதத்தை எஸ்றாதான் எழுதினார் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

உள்ளடக்கம் :

இந்த ஆகமத்தை நீங்கள் வாசித்தால்,

1. எரேமியா
2. ஆகாய்
3. சகரியா

ஆகிய தீர்க்கதரிசிகளைக் குறித்தும்,

1. கோரேஸ்
2. பெர்சியனாகிய தரியு
3. அர்தசஷ்டா

என்ற மூன்று புறஜாதி மாமன்னர்களைக் குறித்தும்,

1. செரூபாபேல்
2. யெசுவா (யோசுவா)
3. எஸ்றா

என்ற தலைவர்களைக் குறித்தும், இந்த புத்தகத்தில் நீங்கள் வாசிக்கலாம். இதன் அடிப்படையில் தான் அடுத்த அதிகாரங்களில் பல காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.

இன்னும் ஒரு தகவல், எரேமியாவிற்கு முற்பட்ட தீர்க்கதரிசிகள் யூதர்களின் சிறையிருப்புக்கு முந்தின தீர்க்க தரிசிகள் இவர்களில் பலர் தேவனின் எச்சரிப்பை துல்லியமாக வும், துணிச்சலாகவும் சொன்னார்கள்.

தானியேலும், எசேக்கியேலும் சிறையிருப்பின் தீர்க்க தரிசிகள், இவர்கள் சிறையிருப்பிலிருந்து தேவன் விடுவிப்பார் என்று மக்களை உற்சாகப்படுத்தினவர்கள்.

ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய மூவரும் யூதர்களின் சிறையிருப்புக்கு பிந்தின தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படு கிறார்கள். சிறையிருப்பின் காலம் முடிந்து எருசலேமுக்கு திரும்பி வந்த யூதர்களின் மத்தியில் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளையும், சீர்பொருந்தச்செய்யும் செய்திகளையும் தீர்க்கதரிசனமாக உரைத்தவர்கள் இவர்கள்.

## ஏன் இந்த சிறையிருப்பு :

எஸ்றா ஆகமத்தின் முதல் வார்த்தையை கவனித்துப் பாருங்கள். ''எரேமியாவின்'' வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி என்று ஆரம்பிக்கிறதல்லவா? இந்த ஆகமத்திற்கு ஆதாரமே எரேமியாவின் தீர்க்கதரிசனம்தான். எரேமியாவைக்கொண்டு கர்த்தர் சொன்ன வார்த்தை எப்படி மிகச்சரியான நேரத்தில், விதத்தில் நிறைவேறியது என்பதை விளங்கிக்கொள்ள இந்த புத்தகம் உதவும். எரேமியாவின் தீர்க்கதரிசனத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று ''சிறையிருப்புக்குகொண்டுபோகப்படுவீர்கள் மற்றொன்று ''சிறையிருப்பிலிருந்து திரும்பி வருவீர்கள்'' என்பதே.

எரேமியாவை மிக இளமையான வயதிலே இந்த தீர்க்கதரிசன ஊழியத்திற்கு கர்த்தர் அழைத்தார். ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் தீர்க்கதரிசன ஊழியத்தை செய்தார். ஆரம்ப காலத்தில் யோசியா என்ற தேவனுக்குப் பயந்த ராஜாவின் காலத்தில், எரேமியா தமது ஊழியத்தை துவக்கினார். ஆனால் யோசியாவுக்குப் பின் வந்த ராஜாக்களோ தேவனுக்கு விரோதமானவைகளில் தங்களை இணைத்துக்கொண்டார்கள். மன்னர்கள் மாத்திரமல்ல. மக்களும் தேவனைவிட்டு விலகிப்போனார்கள்.



எரேமியாவின் இதயம் உடைந்தது. அதன் உள்ளேயிருந்து இதயத்தை நொறுக்கும் இறைச்செய்தி புறப்பட்டு வந்தது. கேட்பதற்குத்தான் இதயம் யாருக்குமில்லை.

இறைச்செய்தி திசைமாறியது எச்சரிப்பின் செய்தியாய் உருமாறியது. தேவனின் நியாயத்தீர்ப்பை எரேமியா தெளிவாகச் சொன்னார். ''நான் பாபிலோன் (கல்தேயு) ராஜாவை எழுப்புவேன் அவன் உங்களை அடிமையாகக் கொண்டு போவான்''.

இந்த இறைச்செய்தி மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. ஆனால் அகமோ அலட்சியப்படுத்திய அந்த அளவிற்கு அந்நிய காரியங்கள் அவர்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

என் அன்பு வாசகர்களே, வரலாற்றுக் குறிப்புகளை மாத்திரமல்ல. அத்தோடு வாழ்வியல் குறிப்புகளையும் வழங்குவது எனது கடமை என உணர்கிறேன் எனவே ஆங்காங்கே நான் சுட்டிக் காட்டும் சில காரியங்களை கேள்விகளாக மாற்றிக்கொண்டு உங்களையே தன்னாய்வு செய்து பாருங்கள்.

நமது வாழ்வில் தடம் மாறும்பொழுது, தன்மை மாறும் பொழுது, தரிசனம் மாறும்பொழுது தேவன் தீர்க்கதரிசிகளை எழுப்பி பேசுகிறார். உணர்த்துகிறார் - எச்சரிக்கிறார். இந்த படிப்படியான செயல்பாட்டில் நாம் மனந்திரும்பும் பட்சத்தில் நம்மேல் மாறாத கிருபையை பொழிகிறார். நாம் மனமாறாத பட்சத்தில் யாராலும் மாற்றமுடியாத நியாயத்தீர்ப்பை கட்டளையிடுகிறார். இதை நீங்கள் வேதத்தில் பரவலாக காணலாம்.

எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தபோது ஜனங்கள் அவரை அலட்சியப்படுத்தினார்கள். கூடுதலாக சொல்லப் போனால்

அடித்து துன்புறுத்தினார்கள். நன்றாய் கவனியுங்கள். எந்த மனிதன் தேவனுடைய வார்த்தையை அலட்சியப்படுத்து கிறானோ, அவன் தேவனுடைய தீர்க்கதரிசியையும் அலட்சியப் படுத்துகிறான். அல்லல் படுத்துகிறான். இதுதான் அவனது பின்மாற்ற செயல்பாட்டின் முதல் வெளிப்பாடு.

ஜனங்கள் எரேமியாவின் தீர்க்கதரிசனத்துக்கு செவி கொடுக்காமற் போனதற்கு பல காரணம் உண்டு. அதிலே ஒன்று எரேமியாவின் செய்தியின் சாராம்சம்.

நீங்கள் பாபிலோனுக்கு கொண்டு போகப்படுவீர்கள் இது ஒன்றும் அவர்களுக்கு புதிய செய்தி அல்ல. இது ஏற்கனவே இருந்த பழைய செய்தி பழைய தீர்க்கதரிசனம் தான். உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம் இது உண்மை. எசேக்கியா ராஜாவுக்கு ஏசாயா மூலம் இதைத்தான் கர்த்தர் சொல்லி இருக்கிறார். இதோ நாட்கள் வரும். அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும். (11 இராஜாக்கள் 20:17)

புரிகிறதா? பாபிலோனுக்குக் கொண்டு போகப் படுவார்கள் என்பது உண்மை வாய்ந்த தீர்க்க தரிசனம். இந்த செய்தியை முதன்முதலில் கேட்ட எசேக்கியா ராஜாகூட வருத்தப்படவில்லை. அப்பாடா, என் காலத்தில் நிறைவேறா தல்லவா! அது போதும் என்று தன்னை தேற்றிக்கொண்டார். (சாரி ஏமாற்றிக் கொண்டார்).

இப்போது எரேமியாவின் காலம் அதே தீர்க்கதரிசனம் தான். ஜனங்களுக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை. ‘‘போயா, உன்னை மாதிரி எத்தனை தீர்க்கதரிசிகளை பார்த்திருக்கிறோம். ஏசாயா காலத்திலிருந்து இதைத்தான் சொல்லுகிறீர்கள்’’ என்று ஆகடியம் பண்ணி அலட்சியம் பண்ணினார்கள்.



பிரியமானவர்களே! நியாயத்தீர்ப்பைச் சொல்லி எச்சரிப்பது உங்களைத் தண்டிப்பதற்காக அல்ல. நீங்கள் மனந் திரும்பி கிட்டிச்சேர வேண்டும் என்பதே. அதனால் தான் கால அவகாசத்தைக் கூட்டித் தந்து தமது நியாயத்தீர்ப்பை நிறை வேற்றுவதற்கு சற்று தாமதப்படுகிறார். அதை நீங்கள் உணர வேண்டும்.

கர்த்தருடைய ஊழியர்கள், தேவனுடைய வார்த்தையை சொல்லி எச்சரிக்கும்போது மனந்திரும்புங்கள். அதைவிட்டு விட்டு நோ சான்ஸ் என்று நியாயத்தீர்ப்பைக் குறித்து வியாக்யானம் கொடுக்காதீர்கள்.

இங்கே ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். கீழ்ப்படியா தவர்கள் மாத்திரமல்ல. அப்பாவிகளும் குழந்தைகளும் அடிமை களாக்கப்பட்டனர். இன்னும் யோசித்துப் பாருங்கள். சிறையிருப்பில் பிறந்த குழந்தைகள் பாபிலோனிலே பட்ட கஷ்டத்திற்கு யார் காரணம்? பாவியான தேவனுடைய சித்தத் திற்கு முரண்பட்ட ஒரு மனிதனால் முழுக்குடும்பத்திற்கு சிறையிருப்பு - முழு சபைக்கு சிறையிருப்பு - முழு சமுதாயத் திற்கும் சிறையிருப்பு, இன்னும் சொல்லப்போனால் முழு தேசத்திற்கே சிறையிருப்பு. தற்பரிசோதனை செய்து தேவனுடைய வார்த்தைக்கு நடுங்குங்கள் - தேவனுடைய வார்த்தையின்படி நடந்திடுங்கள்.

மேலும் நீங்கள் கவனிக்க வேண்டும். தேவன் தமது நியாயத்தீர்ப்பை ஒரேயடியாகவும், சடிதியாகவும் செய்ய வில்லை. அவர் ஒரு மனிதனை தண்டிப்பதற்கு முன்பாக மிகவும் யோசிக்கிறார் என்பதுதான் உண்மை. எருசலேமின்மேல் பாபிலோன் ராஜா மூன்று முறை படையெடுத்தார். முதல் படையெடுப்பின் போதுதான் தானியேலும் அவன் நண்பர் களும் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர். அப்போதாவது தேசத்து மக்கள் நடுங்கி அடங்கி போயிருக்க வேண்டும்.

அடுத்த படையெடுப்பு வந்தது எசேக்கியலும் அவனோடு ஒரு கூட்டமும் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டனர். அப்பொழுதும் இவர்கள் முழு எருசலேமையும் துடைத்துக் கொண்டு போவதுபோல மூன்றாவது படையெடுப்பு வந்தது. யூதர்களுக்கு மன்னிப்பே கிடைக்காமற் போயிற்று.

மாயையைப் பின்பற்றுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள் என்ற வசனம் எத்தனை உண்மை, யோசித்துப் பாருங்கள். தேவன் கண்டித்தாலும் தண்டித்தாலும் தான் தெரிந்துகொண்டவர்களை தள்ளுவது மில்லை கொல்லுவதுமில்லை. சிறையிருப்புக் காலத்தில் அவர்களுக்கு தேவனுடைய வார்த்தைகளை சொல்லி ஸ்திரப்படுத்த எசேக்கியேலைப் போன்ற தீர்க்கதரிசிகளை தேவன் எழுப்பினார்.

இப்படி பல சந்தர்ப்பங்களை வேதத்தில் காணலாம். யாக்கோபு தன்னுடைய பொருத்தனைகளை நிறைவேற்றாமல் சீகேம் புத்திரரின் பூமிக்கு போன போது பல்வேறு குழப்பங்கள் அவன் உள்ளத்திலும், இல்லத்திலும் ஏற்பட்ட நிலையில் (அதி 35). உடனே யாக்கோபு கீழ்ப்படிந்ததினால் அவன் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றி வாக்குத்தத்தங்களுக்கு சொந்தக் காரனாக்கினார்.

இதைப் போலவே நியாயாதிபதிகளில் ஒரு சம்பவத்தை வாசிக்கலாம். இஸ்ரவேல் புத்திரர் தேவனை விட்டு பின் வாங்கிப் போனதினால் தேவன் அவர்களை சத்துருவின் கையில் ஒப்புக்கொடுத்தார். ஆனால் அவர் அத்தோடு விட்டுவிட வில்லை. (நியாயாதிபதிகள் 6) தம்முடைய தீர்க்கதரிசியை அனுப்பி அவர்களை திடப்படுத்தினார். அத்தோடு நிற்கவில்லை. தூதனானவரே இறங்கிவந்து, கிதியோனை ஊக்கப்படுத்தினார்.

தூதனானவரின் வார்த்தையைக்கேட்டு, கர்த்தருக்கு பலிபீடத்தைக் கட்டி, பாகாலின் விக்கிரக தோப்பை வெட்டி,



எக்காளத்தை ஊதி, தேவனுடைய வார்த்தைக்கு செயலாக்கம் கொடுத்தபொழுது தேவன் அவனை இஸ்ரவேலின் நியாயாதி பதியாக மாற்றினார்.

பிரியமானவர்களே! தேவனுடைய தண்டனைக்கு முன்பாக தேவனுடைய வார்த்தை நம்மிடத்திற்கு முந்தி வருகிறது. அஃதினை கேட்டு எச்சரிப்படைந்து மனம் வருந்தி மனம் திருந்தி கிட்டிச் சேர்ந்தால் தண்டனைக்குத் தப்பும் வழியை தாமே திறப்பார்.

தேவன் தம்முடைய வார்த்தைகளை சரியான நேரத்தில் நிறைவேற்றுகிறார். நாம் நாட்களையும் மாதங்களையும் மறந்து போனாலும் அவர் மாற்றுகிறவரில்லை. மறந்து போகிறவரு மில்லை. ஆபிரகாமைப் பார்த்து, உன் சந்ததி நாலாம் தலைமுறையில் எகிப்திலிருந்து திரும்பி வரும் என்றார். அது சரியாக நாலாம் தலைமுறையில் நிறைவேறியது.

எஸ்றா புத்தகத்தின் பொருளடக்கம்

அதிகாரம் : 1 கோரேஸ் அரசனும், ஆலயம் கட்ட ஆணையும்

அதிகாரம் : 2 சிறையிருப்பிலிருந்து தாயகம் திரும்பிய முதல் அணியினர்.

அதிகாரம் : 3 புதிய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுதல்

அதிகாரம் : 4 சத்துருக்களின் சதி ஆலோசனைகள்

அதிகாரம் : 5 ஆலயத்திற்கு எதிராய் அரசருக்கு அந்நியர் எழுதிய கடிதம்

அதிகாரம் : 6 அரசரின் ஆதரவும், ஆலயப்பிரதிஷ்டையும்

அதிகாரம் : 7 எஸ்றா - ஓர் அறிமுகம்

அதிகாரம் : 8 எஸ்றா எருசலேமுக்கு திரும்புதல்

அதிகாரம் : 9 எஸ்றாவும் எழுப்புதல் சேவையும்

அதிகாரம் : 10 மக்களின் மனந்திரும்புதல்

## புத்தகத்தில் நோக்கமும் செய்தியும் :

பரிசுத்த ஆவியானவர் சில விசேஷித்த நோக்கங்களோடும் செய்தியோடும் இப்புத்தகத்தை திருமறையில் இடம் பெறச் செய்துள்ளார்.

சபைக்கும், சமூகத்திற்கும் ஆவிக்குரிய தலைவர்களுக்கும் அதிகமான செய்திகள் இப்புத்தகத்தில் உண்டு. நீங்கள் ஒன்றைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். எருசலேமில் இரண்டாம் ஆலயத்தை கட்டியது எஸ்றா அல்ல. ஆலயம் கட்டப்பட்டதைக் குறித்து எஸ்றா ஆகமத்தில் எழுதப் பட்டுள்ளதால் எஸ்றா கட்டியிருக்கலாம் என்று நீங்கள் தவறாக எண்ணி விடக்கூடாது. ஆலயம் கட்டப்படுகிற நாட்களில் எஸ்றா சிறையிருப்பில்தான் இருந்தார். ஆலயப் பிரதிஷ்டை நடைபெற்ற பிறகே அவர் ஆட்களோடும் அரசாங்கத்தின் ஆதரவோடும் எருசலேம் வந்தார். அப்படியானால் எஸ்றா எதை சாதித்தார் என்ற கேள்வி எழலாம். நன்றாய் கவனியுங்கள். ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டு அதைக் கட்டி முடித்தவன் செரூபாபேல்.

சிறையிலிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களை ஆன்மீக விழிப்படையச் செய்து ஆண்டவரில் நிலைக்க எழுப்புதலுக்கு வித்திட்டது எஸ்றா மட்டுமல்ல, எருசலேமின் ஆலயத்தை யல்ல எருசலேம் நகரத்தின் அலங்கத்தைத்தான் நெகேமியா கட்டி எழுப்பினார்.

எனக்கன்பானவர்களே! ஒரே வேலையை பலரோ பல வேலையை ஒருவருமோ, செய்வதை தேவன் விரும்புவ தில்லை. ஒவ்வொருவரையும், ஒவ்வொரு விதமாக அழைக்கிற கர்த்தர் அவரவர்கள் தம்தம் அழைப்பை மாத்திரம் நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறார். இதுதான் இந்த புத்தகம் தருகிற பிரதான செய்தி.

ஆலயம் கட்ட அழைக்கப்பட்டவன் செருபாபேல், ஆன்மீக கேள்விக்கு அழைக்கப்பட்டவன் எஸ்றா. திடப்படுத்தும்



ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் தீர்க்கதரிசிகளாகிய ஆகாய், சகரியா, ஆலயத் திருப்பணிச் சேவைக்கு அழைக்கப்பட்டவன் யெசுவா, அவரவர் தம்தம் அழைப்பில் நின்றதினால்தான் ஆலயம் எழுந்தது, ஆன்மீகம் தழைத்தது.

இப்புத்தகம் சொல்லும் அடுத்த செய்தி என்ன தெரியுமா? தேவன் ஒருதரம் விளம்பினதை இரண்டாம்விசை மாற்றி திருத்து கிறவர் அல்ல, அவர் சொன்னது சொன்னதுதான். எரேமியாவைக் கொண்டும், ஏசாயாவைக் கொண்டும் சொன்னவைகளை யாருக்காகவும், தளர்த்துகிறவரோ மறக்கிறவரோ அல்ல, எத்தனைக் காலமானாலும் அதை அப்படியே நிறைவேற்றுவதற்கு அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். கவனமாயிருங்கள். காலப்போக்கில் கர்த்தர் மாறுவார். மாற்றிவிடுவார் என்று நீங்கள் கனவுக்காணக் கூடாது.

ஆன்மீக எழுப்புதல் எப்படி வருகிறது தெரியுமா? ஆவிக்குரிய தலைவன் தன்னை எப்பொழுது? எங்கு? தரைமட்டும் தாழ்த்துகிறானோ அங்கு அப்பொழுதே எழுப்புதல் பிறக்கிறது. இது எஸ்றா புத்தகம் நமக்குத் தருகிற மற்றொரு செய்தி.

வேறு பிரிதல் என்பதே தேவனுடைய பிரதான கட்டளை. அதில் ஒரு இழையளவும் தேவ ஜனம் வழி விலகுவதை தேவன் கொஞ்சம்கூட விரும்புவதில்லை. வேறுபட்ட ஜீவியம்தான் தேவனுடைய விருப்பம். அதை நிறைவேற்றுவதுதான் தேவப் பிள்ளைகளின் பொறுப்பு என்பதை நமக்குச் சொல்லுவதுதான் எஸ்றாவின் புத்தகம்.

தேவன் செய்ய நினைத்த காரியம் தடைபடாது. சிறையிருப்புக் காலம் நிறைவேறி தாயகம் திரும்புவோருக்கு ஆலயம் கட்ட தேவன் நினைத்தால், அதற்காக எத்தனை ஆட்சி மாறினாலும் அத்தனை அரசர்களும் அரசு கஜானாவை திறந்தளித்தார்கள். அந்த வேலையை தடுத்து நிறுத்த சில

ஆகாப்பேர் வழிகள் அணியணியாய் எழும்பினாலும் அரசு ஆணை அடங்கிய தோல் சுருளை கிடைக்கச் செய்து அரசின் ஆதரவை பெருகச் செய்து அதை முடித்துக் காட்டுகிறவர் கர்த்தர் என்பதை கருத்தாய் சொல்லுகிற புத்தகம் இந்த எஸ்றா புத்தகம்.

பிரியமானவர்களே! அடுத்து வரும் பக்கங்களில் ஆறுவிதமான தலைப்புகளில் ஆண்டவர் எனக்கு அளித்த செய்திகளை அப்படியே தந்து இருக்கிறேன். ஆர்வத்தோடு வாசியுங்கள். அர்ப்பணிக்கும் ஆவியோடு வாசியுங்கள்.

# 2

# கொடுக்கும் கோமான்கள்

எருசலேம் தேவாலயத்தை இடித்தது ஒரு மாமன்னன்தான் இஸ்ரவேல் ஜனங்களை சிறைபிடித்தது புறஜாதியானாகிய அதே மன்னன்தான். நடந்தது என்ன தெரியுமா? என்ன ஆச்சரியம் புறஜாதி மன்னர்களே, புறப்பட்டு போங்கள் என்று புது ஆணை பிறப்பித்தார்கள்.

70 ஆண்டுகால சிறையிருப்பிலிருந்து சிறு சிறு கூட்டமாய் சிங்கார பூமியாகிய, சிங்காசன பூமியாகிய எருசலேமுக்கு யூதர்கள் திரும்பினார்கள்.

சிந்தித்துப் பாருங்கள். யூத மரபில் தோன்றிய ஒருவர் எழும்பி யுத்தம் செய்து எருசலமை கட்டி எழுப்பியிருந்தால் அது நமக்கு ஆச்சரியத்தை தராது.

மக்கள் புரட்சி ஏதேனும் செய்யவில்லை. புதிய பொறுப்பு ஏற்ற மன்னன் கோரேஸ் புத்துயிர் ஊட்டும் புதுப்புது ஆணைகளை பிறப்பித்தார்.

இதுதான் தெய்வ செயல். இப்படிப்பட்ட மாபெரும் புத்திக் கெட்டாத பலவிதமான காரியங்கள் நமது நாட்டில் - நமது மாநிலத்தில் நமது நகராட்சியில் நடக்க போகிறது. தேவாலயத்தை இடித்தவர்கள், தேவ ஜனத்தை நசுக்கியவர்கள், சுவிசேஷத்தின் கதவுகளை பூட்டியவர்கள், சுவிசேஷகர்கள்

வாக்கு கடிவாளம் போட்டவர்கள் தூக்கி எறியப்படுவார்கள். அவர்கள் இருக்கும் இடத்தை நீங்கள் தேடியும் காணா திருப்பீர்கள்.

தேவ ஜனத்திற்கு அனுகூலமான தேவ ஜனத்தை அரவணைத்துப் போகிற ஆட்சியாளர்களை ஆங்காங்கே தேவன் எழுப்பப்போகிறார். ஒரு விசாலமான, விசித்திரமான வித்தியாசமான, விசேஷமான, அனுபவங்களை, அற்புதங்களை, ஆசீர்வாதங்களை தேவனுடைய சபையும் தேவ ஜனமும் காணப் போவது உண்மை.

கோரேஸ் மாமன்னனிடம் யாரும் மனுபோடவில்லை. ஆனால் கோரேஸ் மன்னன் உள்ளத்தில் தேவனே ஏவுதலை உண்டாக்கினார். கோரேஸ் சொல்வதை பாருங்கள். பரலோகத்தின் தேவன் எனக்கு ஆட்சியை தந்தார். எருசலேமில் ஆலயத்தை கட்ட அவரே எனக்கு ஆணையிட்டார் (எஸ்றா 1:2)

தரியு ராஜா சொன்னதை கவனியுங்கள். பரலோகத்தில் இருக்கிறதேவன் (எஸ்றா 6:9, 6:10) ராஜாதி ராஜாவாகிய அர்தக்ஷ்டா அறிக்கையை பாருங்கள். பரலோகத்தின் தேவனாகிய, இஸ்ரவேலின் தேவனாகிய (எஸ்றா 7:12)

இப்படி தேவனை அறியாதவர்கள் எல்லாம் தேவனை அறிக்கையிட்டதும் அன்றி தேவ ஜனத்தை சந்தோஷமாய் சொந்த பூமிக்கு அனுப்பினார்கள்? மற்றுமா? பொன்னையும், வெள்ளியையும், மரங்களையும், மிருக ஜீவன்களையும், உப்பு முதலான சகல பொருட்களையும் தாராளமாய் மாத்திரம் அல்ல. ஏராளமாய் கொடுத்தார்கள். போனசாக பணியாளர்களையும் பாதுகாவலர்களையும் அனுப்பி வைத்தார்.

இதுதான் தெய்வசெயல் இதைத்தான் நாம் எதிர்பார்க்க வேண்டும். இதைவிட்டு விட்டு நாங்கள் உங்கள் பக்கம் இருக்கிறோம் எங்களுக்கு ஏதாகிலும் செய்யுங்கள் என்று



ஆட்சியாளர்களிடம் கெஞ்சுவது கேவலமான ஒன்று கொச்சையாக சொல்ல வேண்டுமானால் பிச்சைக்காரத்தனம் என்பதை நினைவில் வையுங்கள்.

கோரேஸ், தரியூ போன்றவர்கள் எந்தவித கைமாறு கருதாமல் கர்த்தருடைய ஜனத்திற்கு கரிசனை காட்டினார்கள். அதுதான் உண்மையான தெய்வ நடத்துதல்.

அதைவிட்டு விட்டு ஓட்டுக்காவும், துதிபாட்டுக்காகவும் எலும்புதுண்டை வீசுவதுபோல ஆட்சியாளர்கள் அள்ளி வீசுகிற சில்லரை அறிவிப்புகள் தேவன் அளித்ததும் அல்ல அனுமதித்ததும் அல்ல.

நேபுகாத் நேச்சார் தேவாலயத்தை இடித்தான் பொற்பாத் திரங்களை கொள்ளை அடித்தான், ராஜகுமாரர்களை சிறைபிடித்தான். அதே சமயம் அரண்மனைக்கு கொண்டு போகப்பட்ட தானியேலுக்கும் அவன் நண்பர்களுக்கும் ராஜ சாப்பாட்டை கொடுத்தான்.

இங்குதான் ஒன்றை கவனிக்க வேண்டும். தானியலும் அவனது நண்பர்களும் அந்த சாப்பாட்டை ஏற்றுக்கொள்ள வில்லை. தாய் உள்ளத்தோடு கொடுத்தார் என்று புது பாட்டை பாடவில்லை. மாறாக அது தீட்டு என்று ஒதுக்கி தள்ளினார்கள்.

பிரியமானவர்களே! தேவ ஜனத்தை தீட்டுப்படுத்த ஆட்சி யாளர் மூலமாக பிசாசு அனுப்பி வைக்கிற ஆயுதங்களில் ஒன்று சாப்பாடு. கவனமாய் இருங்கள். ஆலயத்தை ஒரு புறம் இடிக்கிறான். ஆலயத்தின் பாத்திரங்களை தீட்டுப்படுத்துகிறான். அதே கையினால் ஆகாரத்தை புசிக்கிறவன் சோரம் போகிறவன் கவனமாய் இருங்கள்.

ஆதியில் இருந்தே சாப்பிடுகிற காரியம்தான் மனிதனுக்கு கண்ணியாக இருந்தது. ஏதேனிலே சாத்தான் பழத்தை புசிக்க சொன்னான். ஈசாக்கும் சாப்பிடுகிறதற்கு முதலிடம்

கொடுத்ததினால்தான் தான் விரும்பினது ஒன்று செய்தது ஒன்று என்ற நிலைக்கு ஆளானான். ஏசாவும் ஒருவேளை போஜனத்திற்காகத்தான் தனது சேஷ்டபுத்திர பாகத்தை இழந்தான். இப்படி ஏராளமான மேற்கோள்களை காட்ட முடியும்.

அவ்வளவு ஏன்? நமது ஆண்டவர் இந்த உலகத்தின் இருந்த நாட்களில் ''இந்த கல்லுகளை அப்பங்களாக மாற்றி புசியுங்கள்' என்று சாத்தான் உணவை காட்டிதான் சோதனைக்கு வழிவகுத்தான். ஆனால் நமது ஆண்டவர் அந்த சாப்பாட்டை ஒதுக்கி சாத்தானை வெற்றி கண்டார்.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை எனது வாசகர்கள் புரிந்து கொண்டு இருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் எனது வாசகர்கள் விவரமுள்ளவர்கள், வீரம் உள்ளவர்கள், விவேகம் உள்ளவர்கள், விசுவாசம் உள்ளவர்கள்.

பாபிலோனிய ஆட்சி காலத்தில் மாத்திரம் அல்ல. பெர்சியா ராஜாவாகிய அகாஸ்வேரு காலத்தில் கூட தேவ ஜனத்திற்கு விரோதமாக உபத்திரவம் தலைவிரித்து தாண்டவம் ஆடியது உண்மை, மக்கள் ஊர்வலம் போகவில்லை. உபவாசித்தார்கள்.

மொர்தகாய் அரமனைக்குள்ளே இருந்தான். தான் யூதன் என்ற நிலையில் இருந்து கொஞ்சம் கூட இறங்கவில்லை. ஆமானுக்கு முன்பாக அடிபணிந்து போகவில்லை. ஆதலால் தான் ஆண்டவரின் ஜனம் பரிபூரண வெற்றியை அந்நிய தேசத்தில் பெற்றது.

இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையையும், தலைவர் என்று சொல்லிக் கொள்ளுகிறவரின் நிலையையும், உற்று பார்க்கும் பொழுது உடல் நடுங்குகிறது. உள்ளம் அழுகிறது. பிரியமானவர்களே! நீங்கள் மொர்தகாயை போல அரசு பணியிலே இருந்தாலும், பதவியிலே இருந்தாலும் நான்



இராஜாதி இராஜாவின் பிள்ளை என்று அறிக்கையிட்டு எவர்க்கு முன்பாகவும் கேள்விக்குறியை போல் முதுகை வளைத்து கேலிக்குரியவர்களாய் ஆகாமல், புருஷலட்சணத்தோடு நடந்து கொள்ளுங்கள்.

எஸ்றா குறித்து உத்தம ஆசாரியனாகிய எஸ்றா என்று இராஜா சாட்சி கொடுத்தார். அப்படிப்பட்ட சாட்சி, பயம் நம்மை குறித்து இராஜாக்களுக்கு உண்டாக வேண்டும். அந்த சாட்சியும், மாட்சியுமே அரசர்களின் இதயத்தையும், கஜானாவையும் திறக்கும்.

நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்தில் இருந்த பொற்பாத்திரங்களை எடுத்து கொண்டுபோய் தன்னுடைய தெய்வங்களின் கோவில்களில் வைத்தான் என்று வேதத்தில் பல முறை வாசிக்கிறோம். இதற்கு ஒரு பிரதான காரணம் உண்டு. ஒரு நாட்டு அரசன் இன்னொரு நாட்டு அரசனுடன் யுத்தம் செய்யும் போது அந்த நாட்டில் உள்ள கோவில் விக்கிரகத்தை எடுத்து சென்று தனது தெய்வத்தின் கோவிலில் வைப்பான். அதுதான் முழுமையான வெற்றிக்கு அடையாளம்.

அதாவது அந்த கடவுள் எனது கடவுளுக்கு அடிமை. அந்த கடவுளை நம்புகிறவர்கள் எனக்கு அடிமை. இதுதான் அதன் பொருள். இந்த நோக்கில்தான் நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்துக்குள் நுழைந்தான். நம்முடைய தேவன் விக்கிரமாக அல்ல ஆவியாய் இருக்கிறார். அந்தோ! ஆவியான தேவனை அவனால் அரஸ்ட் பண்ண முடியவில்லை. ஆத்திரம் கொண்டவன் பாத்திரங்களை வாரி சென்றான். அதை தனது கடவுளின் கோவிலில் வைத்தான்.

அதாவது பாத்திரங்களை தெய்வத்திற்கு ஒப்பாக நேபுகாத் நேச்சார் கருதினான் என்ன விந்தை. கோரேஸ் மாமன்னன் ஆட்சிக்கு வந்தவுடன் பொன்னால் ஆனவைதானே என்று வைத்துக் கொள்ளவில்லை. அதை அப்படியே எருசலேமுக்கு

திருப்பி அனுப்பி விட்டான். இன்றைக்கு தேவாலயங்களில் பரிசுத்த பொற்பாத்திரங்கள் இல்லை. நாம் தான் அந்த பாத்திரங்கள். தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம், ஆயத்த மாக்கப்பட்ட பாத்திரம், பரிசுத்தமாக்கப்பட்ட பாத்திரம் நாம்தான்.

ஒருவன் நம்மை சிறைபிடிக்க விரும்புகிறான். மற்றொரு வனோ நம்மை சிறையிலிருந்து வெளியேற உதவுகிறான். இப்படிப்பட்ட இரண்டு சக்திகள் இன்றும் இகத்தில், இந்தியாவில் செயல்படுகிறது என்பது உண்மை.

தேவஜனம் இதற்கெல்லாம் அஞ்சதேவையில்லை. அழ தேவையில்லை. எந்த சூழ்நிலையிலும் நமக்காக யுத்தம் செய்கிறவர். நமது பட்சத்தில் உள்ளார். கோரேஸ், தரியு போன்ற நல்ல உள்ளங்களை அரவணைத்து அனுகூலம் செய்யும் ஆட்சியாளர்களை எழுப்ப அவர் போதுமானவராக இருக்கிறார்.

எத்தனையோ தடைகள், தந்திர முயற்சிகள், தர்க்கங்கள், தேவாலய கட்டுமான பணிக்கு எதிராக எழுந்தது. ஆனால் ராஜாக்களே அதை தவிர்த்தனர் தவிடு பொடியாக்கினர்.

வேடிக்கையான ஒரு சம்பவம், கோரேசின் ஆட்சிக்கு பிறகு பல ஆட்சி மாறிவிட்டது. புது குழப்பம் ஒன்று வந்தது. தேவாலயம் கட்ட கோரேஸ் சட்டம் போட்டானா? என்ற கேள்வி எழுந்தது. அந்த நேரத்தில் இரண்டு காரியம் நடந்தது. அப்படி ஒரு நகல் உண்டா? என்று தரியு தேடுவதற்கு உத்தரவு போட்டான்.

அது ஏதோ ஒரு இடத்தில் இருந்து பத்திரமாக கண்டு பிடிக்கப்பட்டது.

கர்த்தருடைய பிள்ளைகளே! நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். நமக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்க தேவன் திட்டமிட்டுவிட்டால் அதை தடுக்க யாராலும் முடியாது. வருகிற ஆட்சியாளர்கள் நமக்கு அனுசரனையான



சட்டங்களையே பிறபிப்பார்கள். மற்றுமல்ல கோரேசின் ஆணை நகல் கிடைத்ததுபோல அனைத்து உதவிகளும் அனுசரனைகளும் ஏற்றகாலத்தில் நமக்கு உண்டாகும்.

இன்றைய சூழ்நிலைகளை வைத்து நீங்கள் கலங்க தேவையில்லை. நமக்கு தீங்கு செய்ய எவராலும் முடியாது. சிலர் எழும்பலாம். அவர்கள் புல்லைப் போல செழுமையாய் தழைக்கலாம். ஆனால் அவர்கள் அதிசீக்கிரத்தில் கருகி போவார்கள். நம்மை உலக தோற்றம் முன்னே தெரிந்து கொண்ட தேவன் சிலுவையிலே சகலத்தையும் வெற்றி சிறந்து நமக்கு என்று சகலத்தையும் சுதந்திரமாக வைத்து இருக்கிறார்.

அனுபவிக்க பிறந்தவர்கள், ஆளப்பிறந்தவர்கள், தேவசித்தம், தேவ திட்டம் என்ற வட்டத்திற்குள் நிற்போமா னால் கொடுக்கும் கோமான்கள், அரவணைக்கும் ஆட்சியாளர் கள் நம்மை சூழ நிற்பார்கள். அதே வேளையில் தேவனுடைய எச்சரிப்பை உதாசீனப்படுத்துவோமானால் ஆட்சியாளர்களே அம்பாய் மாறுவார்கள் கவனமாய் இருங்கள் கர்த்தருக்குள் திடப் படுங்கள்.

என்னிடத்தில் அடிக்கடி கேட்கப்படுகிற ஒரு கேள்விக்கு பொதுவான ஒரு பதிலை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது என்னுடைய கருத்து மட்டுமே. அதே சமயத்தில் என் கூற்றுக்கு வேத அடிப்படையில் ஆதாரமும் உண்டு என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தேவனுடைய ஆலய கட்டிட நிதிக்கு கிறிஸ்தவரல்லா தவரிடத்திலிருந்து நன்கொடைகள் வாங்கலாமா? புற மதஸ்தரிடம் வாங்கப்படும் பணம் பரிசுத்த ஆலயத்திற்கு பயன்படுத்தப்படுவது சரியா? இப்படிப்பட்ட கேள்விகள் நல்ல கேள்விதான். அவர்களின் பக்தி வைராக்கியத்தை பாராட்ட கடமை பட்டிருக்கிறேன்.

தேவனுடைய ஆலய பணிக்கென்று மற்ற மதத்தினர் கொடுக்கும் பணத்தையோ, கட்டுமான பணிகளுக்காக புற மதஸ்தரையோ பயன்படுத்துவது தவறல்ல என்பது என்னுடைய கருத்து.

வனாந்திரத்தில் மோசே ஆசரிப்பு கூடாரத்தை உண்டு பண்ணின பொழுது, அதன் பணிமுட்டுகளை செய்வதற்காக ஏராளமான பொன்னையும் வெள்ளியையும், வாரிக் கொடுத்தார்கள். அது எங்கிருந்து வந்தது தெரியுமா? அவ்வளவும் எகிப்தியரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டது அல்லது எகிப்தியரால் கொடுக்கப்பட்டது.

இஸ்ரவேல் புத்திரருடைய உழைப்பை எகிப்தியர் 400 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்தார்கள். ஆகவேதான் அப்படிப்பட்டவர்களிடமிருந்து வெள்ளியையும் பொன்னையும் வாங்க தேவன் அனுமதித்தார். அப்படி வாங்கப்பட்ட பொன்னையும், வெள்ளியையும் அவர்கள் ஆசரிப்பு கூடாரத்திற்கு கொண்டு வந்தபொழுது அதை தள்ளாமல் ஏற்றுக்கொண்டார்.

இந்த அடிப்படையில் நாம் நிதானித்து சில காரியங்களை நாம் தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது. ஒரே கடையில் பல வருடங்களாக வீட்டு உபயோகப்பொருட்களை தொடர்ந்து வாங்குகிறோம். ஒருவரிடத்தில் பல வருடங்களாக தொடர்ந்து வேலை செய்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் உங்கள் நிமித்தமாக பல ஆண்டுகள் நன்மை அனுபவித்து வருகிறார்கள் என்பது உண்மையல்லவா? அப்படிப்பட்டவர்களிடத்தில் ஆலயகட்டிட காரியங்களுக்காக நன்கொடை வாங்குவதில் தவறில்லை.

ஆசரிப்பு கூடாரம் கட்டின பொழுது அதற்கான சகல வேலைகளையும் இஸ்ரவேல் புத்திரரே செய்தார்கள். ஆனால் சாலமோன் தேவாலயம் கட்டினபொழுது காரியங்கள்



வித்தியாசமாக இருந்தது. தீருவின் ராஜாவாகிய ஈராமின் ஆட்கள் மரங்களையும், கற்களையும், வெட்டியும், செதுக்கியும் தேவாலயத்தின் கட்டுமான பணிகளுக்கு உதவினார்கள்.

எனவே, பொதுவான நன்கொடையையும் பொதுவான தொழிலாளர்களையும் தேவாலய கட்டுமான பணிக்கென பயன்படுத்துவது தவறானது அல்ல. அதே சமயத்தில் இன்னொன்றையும் நாம் சிந்திக்க தவறிவிடக்கூடாது. வேசிப் பணமும், நாய் விற்றகாசும் கர்த்தருடைய ஆலயத்திற்குள் வரலாகாது என்பது தேவனுடைய கட்டளை. அதாவது முறையற்ற வகையில் வந்த சமூக விரோதமான செயல்கள் மூலம் சம்பாதித்து வந்த பணத்தை தேவ ஆலய பணிக்கென வாங்கக் கூடாது. அப்படிப்பட்ட பணம் தேவனுக்கு தேவையில்லை. அப்படிப்பட்ட தேவாலயம் நமக்கும் தேவையில்லை.

நேபுகாத் நேச்சார் கொள்ளையடித்து கொண்டு வந்ததை கோரேசு திருப்பிக் கொடுத்தார். இது அவனது முதல் கிரியை, பரலோகத்தின் தேவன் எனக்கு ஆட்சிக் கொடுத்தார் என்று சாட்சியிட்டான். இது இரண்டாவது கிரியை, ஆலயத்தை கட்ட கட்டளை கொடுக்க ஏவுதலைப் பெற்றான் அது மூன்றாவது கிரியை. சரியான தேவ வழிநடத்துதலோடு தான் கோமானாகிய கோரேசு தேவாலயத்திற்கென அள்ளிக்கொடுத்தான்.

கோரேஸ், தரியு, அர்த்தசஷ்டா ஆகிய மூவேந்தர்களை நினைக்கும் பொழுது என்னுள்ளம் பூரிக்கிறது. அவர்கள் ஆலய பணிக்கென்று அள்ளிக் கொடுத்தார்களே தவிர அதன் கட்டுமான பணியிலோ, நிர்வாகத்திலோ தத்தம் மூக்கை நுழைக்கவில்லை. இது நல்ல முன்னுதாரணம்.

பிரியமானவர்களே! அரசாங்கத்திடமிருந்தோ அந்நிய புத்திரரிடமிருந்தோ ஆலய காரியங்களுக்காக அனுகூலங்களோ, நிதியுதவிகளோ வரலாம் அல்லது பெறலாம். ஆனால்

அவர்கள் தலையிட்டு ஆதிக்கம் செலுத்துவதை எந்தக் காலத்திலும் அனுமதிக்கக்கூடாது.

சரி விஷயத்திற்கு வருவோம் கர்த்தர் தமது ஜனத்தின் மேலும், தமது ஆலயத்தின் மேலும் எப்பொழுதும் வைராக்கிய முள்ளவராக இருக்கிறார். தமது ஜனத்தையும், ஆலயத்தையும் கட்டியெழுப்ப அவர் கொண்டிருக்கும் கரிசனை மிகவும் விசேஷமானது.

நன்றாய் யோசித்துப் பாருங்கள் எங்கிருந்து வந்து சிறைப்படுத்தினார்களோ - ஆலயத்தை சிதைத்தார்களோ அங்கிருந்தே ஆலயத்தைக் கட்ட ஆணை பிறந்தது. சிறையிருப்போர் திரும்ப உத்தரவு பிறந்தது. உங்களுக்கும் அப்படித்தான். உபத்திரவம் உங்களுக்கு எங்கிருந்து வந்ததோ அங்கிருந்தே உதவும் கரங்களை தேவன் எழுப்பப் போகிறார். உடல் தளர்ந்து போனதா? உள்ளம் சோர்ந்து போனதா? இப்பொழுதே உற்சாகம் கொள்ளுங்கள். தடுக்கும் - கெடுக்கும் சக்திகளை தேவன் ஒடுக்குகிறார். கொடுக்கும் கோமான்களை தேவன் ஏற்படுத்துகிறார். எழுந்து கட்டுங்கள் எழும்பி பிரகாசியுங்கள்.

# 3

# கெடுக்கும் குழிநரிகள் !

கர்த்தருடைய வேலை என்பது சாதாரணமான வேலை யல்ல. அது உன்னதமான வேலை. இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத். 16:18) என்று இயேசு சொன்னதி லிருந்து தேவனுடைய சபைக்கும் பாதாளத்தின் வாசலுக்கும் யுத்தம் உண்டு என்பது புலனாகிறதல்லவா?

அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். ஆனாலும் அவர்கள் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள். (எரே 15:20) என்பது எரேமியாவினால் சொல்லப்பட்ட இறைவாக்கு, போராட்டம் இல்லாத ஊழியம் என்று ஏதும் கிடையாது என்பதை நீங்கள் அறிந்திடல் வேண்டும். ஒவ்வொரு வேளை யிலும் ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு காலக் கட்டத்திலும் விதவிதமான எதிர்ப்பு அம்புகள் நமக்கு வரத்தான் செய்யும். அதைக்கண்டு நீங்கள் அஞ்சத் தேவையில்லை. அதைச் சந்திக்க ஆயத்தப்படுங்கள்.

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் நீங்கள் வாசித்துப்பார்த்தால் தேவனுடைய ராஜ்யத்தை, பரிசுத்தவான்களின் சுதந்தரத்தை கெடுக்க பிசாசின் இராஜ்யம் தொடுக்கும் அக்கினியாஸ்திரத்தின் உக்கிரத்தை தெளிவாக புரிந்துகொள்ள முடியும். அதே நேரத்தில் வெற்றி என்பது தேவனுடைய ராஜ்யத்திற்குத்தான் என்பதை நீங்கள் தெளிவாக அறிந்திடல் வேண்டும்.

ஆதியாகமத்தின் முதல் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதியை கவனித்துப் பாருங்கள். அவன் உன் குதிங்காலை நசுங்குவான் ஆக நம்முடைய பாதையில், சேவையில் சில நஷ்டங் களையும், கஷ்டங்களையும், சத்துரு கொண்டு வருவது தவிர்க்க முடியாத ஒன்று.

சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்கள் ஏகோபித்து தேவாலயத்தைக் கட்டும்படி அஸ்திபாரம் போட்டார்கள். அரசு ஆணை அவர்கள் கையில், அரசு கொடுத்த பணம் அவர்கள் பையில் வேலை கிடுகிடு என முடியும் என்று உள்ளம் பூரிக்கிற வேளையில் தான் இஸ்ரவேலரின் சத்துருக்கள் புற்றீசல் போல் விளம்புகின்றனர்.

நீங்கள் எஸ்றா ஆகமத்தை நிதானமாய் படித்துப்பாருங்கள். சத்துரு ஆரம்பத்தில் சண்டைக்கு வர மாட்டான். சமசரத் திற்குத்தான் வருவான். ''பகையாளிக் குடியை உறவாடிக் கெடு'' என்ற தமிழ் பழமொழிக்கொத்த சத்துரு முதலாவது உறவு கொண்டாட வருவான். இதை நீங்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும்.

நம்மோடும் நமது தேவனோடும் பாசம் உள்ளவர்கள் போல் பசப்பு வார்த்தைகள் சொல்பவர்களைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். 'சிறையிருப்பிலிருந்து வந்த ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்று யூதாவுக்கும் பென்யமீனுக்கும் இருந்த சத்துருக்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் செருபாபேலிடத்து க்கும் தலைவரான பிதாக்களிடத்துக்கும் வந்து, உங்களோடு கூட நாங்களும் கட்டுவோம். உங்களைப் போல நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம். இவ்விடத்துக்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் ராஜாவாகிய எசரத்தோன் நாட்கள் முதற்கொண்டு அவருக்கு நாங்களும் பலியிட்டு வருகிறோம் என்று அவர்களோடே சொன்னார்கள் (4:1,2)



எவ்வளவு அழகாக பேசுகிறார்கள் பாருங்கள். ''கட்டுவோம் நாட்டுவோம்'' இப்படிப்பட்ட முகஸ்துதியான வார்த்தைகளைக் கேட்டு மதிமயங்கிப் போய்விடக்கூடாது. என்ன நினைப்பார் களோ, எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்று யோசிக்கக் கூடாது. தெளிவுள்ளவர்களாக பேச வேண்டும் வழவழா கொழ கொழா என்று இழுத்துக் கொண்டிருக்க கூடாது. சட்டென்றும் பட்டென்றும் பதில் சொல்ல வேண்டும்.

செருபாபேலும் மற்றத் தலைவர்களும் சொன்ன பதிலைப் பாருங்கள். 'எங்கள் தேவனுக்கு ஆலயத்தை கட்டுகிறதற்கு உங்களுக்கும், எங்களுக்கும் சம்மந்தமில்லை... நாங்களே கட்டுவோம் என்றார்கள் (எஸ்றா 4:3)

உதவுவதுபோல சில உபத்திரவப் பேர்வழிகள் உறவாடி வருவார்கள் - உடன்படிக்கை செய்ய வருவார்கள். இப்படிப் பட்டவர்களோடு கூட்டணி வைக்க நீங்கள் எந்த நாளிலும் இறங்கி விடக்கூடாது. அது பேராபத்தாய் முடிந்துவிடும்.

சத்துருக்கள் என்றால் புறமதஸ்தர் என்று எண்ணிவிடக் கூடாது. கிறிஸ்தவப் போர்வை போர்த்துக் கொண்டும் வரலாம். யூதாவின் சத்துருக்கள் தேவனுக்குப் பலியிடுகிறோம் என்று சொன்னதுபோல கிறிஸ்துவை அறிந்தவர்கள் கூட சிற்சில பணித்திட்டங்களுக்கு எதிரியாக எழும்பலாம். கவனமாக இருங்கள்.

அப்படிப்பட்ட பதில்களைக் கேட்டு அவர்கள் அமைத லாய் ஒதுங்கி விடுவார்கள் என்று நீங்கள் தப்புக்கணக்கு போட்டு விடக்கூடாது. மாற்றுவழிகளில் தாக்க ஆரம்பித்து விடுவார்கள். யூதாவின் சத்துருக்கள் தேவாலய கட்டுமானப் பணிக்கு எதிராகத் தொடுத்த அக்கினி யாஸ்திரங்களை பட்டியலிடு கிறேன் படித்துப் பாருங்கள்.

1. கைகளை தளரப்பண்ணி (4:4)
2. சங்கடப்படுத்தி (4:4)
3. கைக்கூலி பொருத்தினார்கள் (4:5)

4. பிரியாது எழுதினார்கள் (4:6)

5. வேலையை நிறுத்தினார்கள் (4:23)

இப்படி ஐந்துவிதமான காரியங்களை தேவ ஜனத்தின் சத்துருக்கள் அப்போது பயன்படுத்தியது மாத்திரமல்ல இப்போதும் பயன்படுத்துவார்கள். இதனால் நீங்கள் தற்காலிக பாதிப்பை அடையலாம். சிற்சில பின்னடைவுகள் உங்களுக்கு உண்டாகலாம். ஆனால் தேவனுக்கென்று நீங்கள் ஆரம்பித் திருக்கிற நல்ல பணியை எவராலும் நிரந்தரமாக தடுத்துவிட முடியாது. உங்களைக் கொண்டு ஆரம்பித்தவர் நிச்சயம் அதை நிறைவேற்றி முடிப்பார். இது சரித்திரம் கூறும் சாட்சி.

''தளரப்பண்ணி'' என்பதற்கு பலவீனப்படுத்துதல் என்று பொருள். அதாவது திடீரென பொருளாதார முடக்கத்தை, சுகவீனத்தை, குடும்பத்தில் குழப்பத்தை கொண்டு வந்து, ''இதை நம்மால் செய்ய முடியாது'' என்று உங்களை பிரமிக்க வைத்து உங்களை முடக்கி வைக்க சத்துரு திட்டம் தீட்டுவான்.

எனக்கு இப்படிப்பட்ட அனுபவம் அதிகம் உண்டு. ஒரு பெரிய கூட்டத்திற்கோ திட்டத்திற்கோ தேதி குறிப்பிட்டு விட்டால் அந்த நாளிலிருந்து புதுப்புது பெலவீனம் சரீரத்தில் தலைதூக்க ஆரம்பிக்கும். புதுப்புது செலவுகள் புற்றீசல் போல புறப்பட்டு வரும். இனி ''எதுவும் நம்மால் செய்ய முடியாது, குறிப்பிட்ட எதையும் செய்ய இயலாது'' என்ற எதிர்மறை எண்ணம் உதிக்க ஆரம்பிக்கும். இதுதான் நம்மைத் தளரப் பண்ணுகிற சாத்தானின் செயல்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தந்தை பெர்க்மான்ஸ் அவர்கள் பாடின ஒரு பாடல் என் நினைவுக்கு வரும் அதையே விசுவாச அறிக்கையாக இரண்டு முறை அறிக்கை செய்து விட்டு பிரச்சினையை தூக்கி வீசி விடுவேன்.

உங்க ஊழியம், நான் ஏன் கலங்கனும்<br>
அழைத்தது நீங்க<br>
நடத்தி செல்வீங்க



இந்தப்பாடல் வரிகள் உங்களுக்கு உற்சாகத்தை தரும் என்று நம்புகிறேன்.

''சங்கடப்படுத்தி'' என்ற வார்த்தையின் பொருள், பல்வேறு விதமான மனக்கிலேசங்களை சத்துரு கொண்டு வரலாம். உங்களுக்கு நூதனமான குற்றச்சாட்டுகளை மக்கள் மன்றத்தின் முன் உங்களைப் பற்றி சத்துரு கொண்டு வரலாம். இஸ்ரவேலரைக் குறித்தும் இப்படித்தான் சொன்னார்கள். நஷ்டம் வரும்'' கலகம் பண்ணுகிறவர்கள். என்றெல்லாம் அபாண்டமான பழியை உங்களுக்கு முன்பாக வைப்பார்கள். உங்கள் மேலானவர்களுடைய உள்ளத்தில் உங்களைக் குறித்த நல்லெண்ணத்தை எடுத்துப்போட அவர்களுக்கு பாதிப்பு உண்டாக்குவதுபோல, அட்டகாசமான வார்த்தைகளை வசதியாக, வர்ணனையோடு போடுவார்கள்.

இவைகளினால் நீங்கள் எந்தக் காலத்திலும் பாதிக்கப்பட மாட்டீர்கள். நான் முன்பு எழுதினதை இப்பொழுதும் எழுகிறேன் சில காரியங்களில் கால தாமதம் ஏற்படுமே தவிர, உங்களுக் குள்ளான, உங்களுக்குண்டான செயல்பாட்டின் தீவிரத்தை யாராலும் அடக்க முடியாது முடக்க முடியாது.

உங்களுக்கு எதிரான, தங்கள் குற்றச்சாட்டுக்கு வலு சேர்க்க கூலி கொடுத்தாகிலும் சில ஆலோசனைக்காரரை ஏற்படுத்திக் கொள்வார்கள். ஒரு ஊழியத்தை உடைக்க இன்னொரு ஊழியருக்கு சில பெரிய தலைவர்களே கைக்கூலி களாக மாறிவிடுவதுதான் கிறிஸ்தவத்திற்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மாபெரும் நெருக்கடி.

பிலேயாம் யார்? அவன் ஒரு தீர்த்ததரிசி, கண்திறக்கப் பட்டவன், கர்த்தரின் ஜனத்தை ஆசீர்வதிக்க, கர்த்தரால் பணிக்கப்பட்டவன். ஆனால் அவன் செய்த மகா பாதகம் என்ன தெரியுமா? கர்த்தருடைய ஜனத்தை வழி விலகிப்போகச் செய்ய பாலாக்குக்கு புதுவழியை சொல்லிக் கொடுக்கிறான். எதற்காக? கூலிக்காக.

அந்தோ! கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக கர்த்தருடைய தீர்க்கதரிசி! சொல்லும்போதே உடல் நடுங்குகிறது. இந்தக்கதை இன்றும் நீடிப்பதுதான் சோகம். சில தலைவர்களே சிலருக்கு தகாத ஆலோசனைகள் தருகிறார்கள். இப்படிப்பட்டவர்களால் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். காலம் மாறும். பிலேயாமின் கதி அவர்களுக்கு நேரும். நீங்கள் புடமிடப்பட்ட பொன்னாய் மற்றவர் முன் ஜொலிப்பீர்கள். அவர்களோ உங்கள் காலின்கீழ் துரும்பைப் போல் இருப்பார்கள்.

யூதாவின் சத்துருக்கள் யூதருக்கு விரோதமாக பிரியாது எழுதினார்கள். அதாவது பெட்டிசன் போட்டார்கள். அதோடு நிற்கவில்லை வேலையை நிறுத்தினார்கள். அதாவது ண்ஞுச்தூ ணிஞுஞீனுஞு வாங்கினார்கள்.

என் அன்பு வாசகரே! உங்களுக்கு விரோதமாக பல்வேறு புகார் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கலாம். வேலையை தொடர முடியாதபடி உங்கள் கைகள் கட்டப்படும்படி கடினமான தாக்குதல் வந்திருக்கலாம். ஒன்றும் நடக்காது மேலிடத்து ஆணை சப்போர்ட் நமக்கு இருக்கிற தென்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிற வேளையிலே அதிகார பூர்வமான தடை உத்தரவுகள் மேலான ஆளுகையாளர்களிடமிருந்து உங்களுக்கு வந்திருக்கும்.

இதற்கெல்லாம் என்ன முடிவு உண்டாகும் என்பது நீங்கள் முன்கூட்டியே தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் எஸ்றா ஆகமத்தை கர்த்தர் வேதத்தில் இணைத்திருக்கிறார்.

எல்லாத் துறையிலும் அறிவியல் வளர்ச்சி ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது போலவே இந்த பெட்டிசன் டிபார்ட் மெண்டையும் பிடித்துக்கொண்டிருக்கிறது. பேனா பேப்பரை இப்போது யாரும் பயன்படுத்திக் கொண்டிருப்பது கிடையாது. மாறாக செல்போனையும் இமெயிலையும்தான் இந்த ஈனத்தன வேலைக்கு பயன்படுத்துகிறார்கள். எப்பொழுதெல்லாம்



நினைக்கிறார்களோ எண்ணை அழுத்த வேண்டியது புகார்களை அள்ளிக் கொட்ட வேண்டியது.

இப்படிப்பட்டவர்களின் தாக்குதலை நீங்கள் எவ்வளவு கண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது இதில் நான் சற்று அதிகமாகவே பாதிக்கப்பட்டிருக்கிறேன். பாதிக்கப்பட்டிருக் கிறவர்களை சற்று அதிகமாகவே கண்டிருக்கிறேன்.

புதுசா, பணத்தையும், பட்டத்தையும் பெற்றிருக்கிற சில பரிசுத்தவான்கள் மற்ற ஊழியர்களை போட்டியாக நினைத்துக் கொண்டு அவர்களை வெட்டி வீழ்த்த சில குட்டி ஊழியர்களை கைக்குள்ளாக போட்டுக்கொண்டு அவர்மேல் ''புகார் கொடு இப்படி வழக்குப்போடு'', பஞ்சாயத்துக்கு வர வை என்றெல்லாம் துர்யோசனை சொல்லிக் கொடுத்து துள்ளி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவர் இவர்களைப் பார்த்து எள்ளி நகையாடுவார்.

இப்படிப்பட்ட நிலையிலும் நம்மைக் காக்க நம்மோடு இருப்பது விசேஷமான இரண்டு வல்லமைகள், ஒன்று கர்த்தருடைய கரம், மற்றொன்று கர்த்தருடைய கண்கள், கர்த்தருடைய கரம் நம்மோடு இருக்கும் பட்சத்தில் எண்ணில்லாத நன்மைகள் நம்மை சுற்றிவரும். எஸ்றா புத்தகத்தில் மாத்திரம் ''கர்த்தருடைய கரத்தில் இருந்து'' வருகிற ஆறுவிதமான விசேஷங்களை விவரிக்கிறது. அஃதினை தனியாக கடைசி அதிகாரத்தில் எழுதியுள்ளேன்.

வேலையைத் தடுக்காதபடிக்கு கர்த்தருடைய கண்கள் அவர்கள்மேல் வைக்கப்பட்டிருந்தது (5:5)

கர்த்தருடைய கண்களும் கரங்களும் உங்களோடு இருப்பதினால் ஆரம்பித்த நீங்களே அந்தப் பணியை முழுமையாக முடிப்பீர்கள். கெடுக்கும் குழிநரிகள் அணியணியாய் வந்தாலும் தனி நபராய் அவைகளை சந்திக்க சிதறடிக்க தற்பரன் ஆவி உங்களைப் பெலப்படுத்தும்.

# 4

## திடப்படுத்தும் தீர்க்கதரிசிகள் !

எஸ்றா புத்தகத்தின் மையப் பகுதியில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இரண்டு பேருடைய சேவை மகத்தான சேவை. கோரேஸ் என்னதான் சட்டம் பிறப்பித்து இருந்தாலும், கொடுத்து உதவியிருந்தாலும், கொடுமையாளர்களின் தந்திரத் தினாலும், வஞ்சகத்தாலும் தேவாலயத்தின் கட்டுமானப்பணி அறவே தடைபட்டுப் போயிற்று.

ஏதோ வாரக் கணக்கென்றும் மாதக் கணக்கென்றும் நீங்கள் எண்ணிவிடக் கூடாது. ஆண்டுக் கணக்காய் பணிகள் நின்று போயிற்று. சற்றேறக்குறைய 16 ஆண்டுகள். ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டவர்கள் ஆர்வம் இழந்தனர். அக்கரை இழந்து நீர்த்தும் போயினர். அவரவர் தம்தம் வீடுகளைக் கட்டி தமது பொறுப்பை மறந்தே போயினர்.

அஸ்திபாரம் போடுவதற்கு ஆரம்ப கர்த்தாக்களான, செருபாபேலும், ஆசாரியனாகிய யெசுவாவும், செய்வதறியாது, செய்யத்துணியாது நின்றனர். இந்தக் காலக் கட்டத்தில் தான் தாம் சொன்னதை நிறைவேற்ற தமது ஜனத்தை தட்டியெழுப்ப இரண்டு தேவ தாசர்களை கர்த்தர் எழுப்பினார்.

அப்பொழுது ஆகாய் தீர்க்கதரிசியும் இத்தோவின் குமார னாகிய சகரியா என்னும் தீர்க்கதரிசியும், யூதாவிலும், எருசலேமிலுமுள்ள யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள் அப்பொழுது



செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோச தாக்கின் குமாரனாகிய யெசுவாவும் எழும்பி எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தை கட்டத்தொடங்கினார்கள். அவர்களுக்குத் திடன் சொல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள் (5:1,2)

செருபாபேல் ஐம்பதாயிரம் பேர்களை வழிநடத்தி வந்த தலைவன், பிறப்பின்படி ராஜ வம்சத்தான் பொறுப்பின்படி கவர்னர், ஆனாலும் அவரால் தானாக உற்சாகப்பட முடியவில்லை திடப்படமுடியவில்லை அவர்களுக்கு ஆகாய், சகரியா போன்றோர் தேவைப்பட்டார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? நமக்கும் நமது சபைக்கும் நமது சமூகத்துக்கும், தேவனுடைய தீர்க்கதரிசிகள் தேவை. தீர்க்கதரிசிகள் எங்கே இருக்கிறார்களோ அங்கே ஜனங்கள் உணர்வடைகிறார்கள். உயிர்மீட்சியடைகிறார்கள், உழைக்க எழும்புகிறார்கள். ஊழியம் செய்யப் புறப்படுகிறார்கள்.

தீர்க்கதரிசன சேவை எல்லோருக்கும் தேவை, அரசனுக்கும் தேவை, ஆசாரியனுக்கும் தேவை. தலைவனுக்கும் தேவை சகலருக்கும் தேவை, ஏனென்றால் தேவன் அவர்களை தமது வாயாக இருக்கும்படி அபிஷேகித்து அவர்கள் மூலமாய் தமது வார்த்தையை அனுப்புகிறார்.

ஆகாய் என்பதற்கு ''பண்டிகை'' அல்லது விருந்துக் களிப்பு என்றும், சகரியா என்பதற்கு ''யாவே நினைத்திருக் கிறார்'' என்றும் பொருள். அதாவது சோர்ந்துபோன யூத மக்களுக்கு பண்டிகையின் மன மகிழ்ச்சியை உண்டாக்க தேவன் நினைத்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாகத்தான் ஆகாயையும், சகரியாவையும் தேவன் எழுப்பினார் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். திடப் படுத்தினார்கள் என்பது குறிப்பிட வேண்டிய சிறப்பம்சம்.

இந்த ஆகாய், சகரியா, ஆகியோரைக் குறித்து இன்னும் சில காரியங்களை குறிப்பிட விரும்புகிறேன். ஆகாய் எருசலேமி

லிருந்து பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு போகப் பட்டவன். சகரியா பாபிலோனின் சிறையிருப்புக் காலத்தில் பிறந்தவன். இன்னும் புரியும்படி சொல்ல விரும்புவேனானால் சிறையிருப்பின் துவக்கத்தில் குழந்தையாய் போனவன் ஆகாய். சிறையிருப்பின் முடிவில் குழந்தையாய் வந்தவன் சகரியா, சகரியாவிற்கும், ஆகாயிக்கும் இடையில் ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் வித்தியாசம்.

இவர்கள் இணைந்து ஊழியம் செய்வதற்கு தலைமுறை இடைவெளி தடையாக இல்லை. முதிர்ந்த ஊழியராகிய ஆகாய் இளைஞனாகிய சகரியாவைத் தன்னோடு சேர்த்துக் கொண்டு மாபெரும் தெய்வப்பணியை செய்தார் என்பதை இக்கால சீனியர் தலைவர்களும் கவனிக்க வேண்டும். சீனியர் ஊழியர் களும் கவனிக்க வேண்டும். சீனியர் ஊழியர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேவப்பணி தாமதப்படுவதற்கும், கேவலப்படுவதற்கும் இந்த சீனியர், ஜுனியர் பிரச்சினைதான் பிரதானமாக இருக்கிறது. சின்னப்பையன் இவனுக்கு என்னத் தெரியும்? என்று சீனியர்களும் அந்தக் காலத்து ஆசாமி இவருக்கு என்ன புரியும்? என்று ஜுனியர்களும் வசைவு அம்புகளை மாற்றி மாற்றி தொடுப்பதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஆகாய், சகரியா, மல்கியா என்ற மூவரும் சிறைமீண்ட இஸ்ரவேலருக்குத் தீர்க்கத்தரிசிகள், எசேக்கியேலும், தானியேலும் சிறையிருப்பின் தீர்க்கதரிசிகள், ஏசாயா, எரேமியா போன்றோர் சிறையிருப்புக்கு முந்தின தீர்க்கதரிசிகள். இந்தப் பட்டியலை நான் கொடுப்பதற்குக் காரணம் உண்டு.

சிறையிருப்புக்கு முந்தின தீர்க்கதரிசிகளாகிய ஏசாயா எரேமியா போன்றோர் பல தரிசனங்களைக் கண்டு எழுதினார்கள். சிறையிருப்பின்போது எசேக்கியேலும், தானியேலும் தரிசனம் கண்டு எழுதினார்கள். இவர்களுக்கு இளைஞனாகிய சகரியா எந்த விதத்திலும் குறைந்தவன் அல்ல.



எட்டுக்கு மேற்பட்ட தரிசனங்களைக் கண்டு தமது தீர்க்கதரிசன புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

ஆகாய், சகரியா ஆகியோரது தீர்க்கதரிசன ஊழியத்தின் முழுமையான வார்த்தைகள் எஸ்றாவிலே பதிவு செய்யப்படா விட்டாலும், பழைய ஏற்பாட்டின் கடைசிப் பகுதியிலே ஆகாய், சகரியா ஆகியோரின் தீர்க்கதரிசனங்களை ஆவியானவர் சேர்த்து இருக்கிறார்.

மிக சொற்பகால சம்பவத்தை, சொற்பகால அளவைக் கொண்டது ஆகாய் தீர்க்கதரிசன புத்தகம், சற்று நீண்ட அளவை கொண்டது சகரியாவின் புத்தகமாகும். ஆனால் இவர்கள் இருவரும் மகா உன்னதமான இரண்டு காரியங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து மக்களைத் திடப்படுத்தி இருக் கிறார்கள். ஒன்று கட்டி முடிக்கப்படாத ஆலயம் கட்டி முடிக்கப் பட வேண்டும், மற்றொன்று மேசியாவின் வருகை, கடைசிக் காலத்தில் மேசியாவின் உலக விஜயத்தை இவர்கள் அடித்துக் கூறியிருக்கிறார்கள்.

கழுதையின் மேல் கிறிஸ்து பவனி வருவது, குத்தப்பட்ட வராகிய மேசியா, ஒலிவ மலையின்மேல் ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடு இயேசு வருதல், போன்ற மேசியாவைக் குறித்த அதிமுக்கியமான தீர்க்கதரிசனங்கள் உரைத்தவர்கள் அந்த ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகள்.

தீர்க்கதரிசிகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நிகழ்கால காரியங்களை சுட்டிக்காட்டி, ஜனங்களை உற்சாக மூட்டி எழுப்புதலுக்கு வித்திடுவது நல்லதுதான். அவசியம் தான். அத்தோடு நமது பணியை நிறுத்திவிடக்கூடாது. தீர்க்கதரிசன ஊழியத்தின் மறுபக்கம் என்று ஒன்று உண்டு. அது தான் கர்த்தரின் வருகைக்கென்று மக்களை ஆயத்தப்படுத்தல், இது தீர்க்கதரிசியின் கடமை. வருகைக்கான சத்தியத்தைச் சொல்லாமல், வருகைக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தாமல் தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள் வருவாய்க்கான தீர்க்க தரிசிகள்

இந்த வெறும்வாய் தீர்க்கதரிசிகள் அவர் வருகையின் நாளில் வெட்கப்பட்டுப் போவார்கள்.

புதிய ஏற்பாட்டின் அனைத்து அப்போஸ்தலர்களும், கிறிஸ்துவின் வருகையைக் குறித்து கரிசனையோடு பிரசங்கித்ததை வேதத்தில் காண முடியும்.

தேவ ஜனத்தை திடப்படுத்தும் மாபெரும் கிருபையை கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரர்களுக்கு கொடுத்திருக்கிறார். அவர்களைக் கொண்டு குடும்பங்களையும், சபைகளையும், கட்டியெழுப்ப, கட்டி முடிக்க தேவன் சித்தம் கொண்டுள்ளார்.

திடப்படுத்துகிற செய்தி என்றால், நாம் விரும்புகிற வார்த்தைகள் வருமென்று ஏமாந்துவிடக்கூடாது. திடப்படுத்தல் என்றால் ''பெலப்படுத்துதல்'' என்று பொருள். நம்மைப் பெலப்படுத்த தீர்க்கதரிசிகள் மூலமாய் தேவன் கொடுக்கும் மருந்து இனிப்பாகவும் இருக்கலாம். கசப்பாகவும் இருக்கலாம். அஃதினை இன்முகத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் மிகுந்த பலனுள்ளது.

அதை விட்டுவிட்டு நம்முடைய மனதுக்கேற்ற மதுரமான வார்த்தைகளை இவர் பேசவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்த்தால் தீர்க்கதரிசியை திசை திருப்பி விடுவீர்கள். தீவினைதான் வந்து சேரும்.

சிறைமீண்ட இஸ்ரவேலர்கள் ஆலயப்பணியின் காரியங்கள் தடைபட்டதினால் அவரவர் தத்தம் வசதிக்காக மச்சுவீடுகளைக் கட்டிக்கொண்டு சுகமாய் குடியிருக்க துவங்கி விட்டனர். தேவனின் ஆலயத்தைக் குறித்த கரிசனை கிஞ்சிற்றும் அவர்களுக்கு இல்லை. அப்பொழுதுதான் இறைவாக்கினர் ஆகாய் எழும்பினார். அவரின் முதல் செய்தி என்ன தெரியுமா?

1. ''தேவனுடைய வீடு பாழாய்க் கிடக்கும்போது நீங்கள் மச்சுபாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ''



2. ''உங்கள் வழிகளை சிந்தித்துப் பாருங்கள்''
3. ''ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருக்கிறேன். அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் முதல் அதிகாரம்)

இப்படி அடுக்கிக்கொண்டே போகிறவர் இடையிடையே இஸ்ரவேல் புத்திரர் அனுபவித்து வருகிற சாபங்களையும் வறட்சியையும் சுட்டிக் காட்டுகிறார்.

இதுதான் தீர்க்கதரிசன செய்தி - திடப்படுத்தும் செய்தி. ஜனங்களுக்கு காயம் கட்டுதல் அவசியம். ஆனால் சீழ் பிதுக்காமல் காயம் கட்டுதல் என்பது அவர்களை மேலும் காயப்படுத்துவதற்கு சமம்.

என்ன நினைப்பார்களோ? என்ன சொல்லுவார்களோ? எதிராய் மாறிவிடுவார்களோ. என்றெல்லாம் ஆகாய் யோசிக்கவில்லை. நிஜ நிலையை துணூச்தூ படம் போல் பிடித்துக் காட்டிவிட்டார் நடந்தது என்ன தெரியுமா? ஆகாய் 1:12. வாசித்துப் பாருங்கள்.

''அப்பொழுது செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோத்சதாகின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனும், ஜனத்தில் மீதியான அனைவரும், தங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கும், தங்கள் தேவனாகிய கர்த்தர் அனுப்பிய ஆகாய் என்னும் தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளுக்கும், செவி கொடுத்தார்கள். ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாகப் பயந்திருந்தார்கள்''.

எங்கே தேவ ஜனம் செவிகொடுத்து பயப்படுகிறதோ அங்கே ஆவியின் ஏவுதலும், ஆன்மீக எழுப்புதலும் உண்டாகும். அப்பொழுது செருபாபேலும், தலைவர்களும், ஜனங்களும் தேவாலயத்துப் பணியைச் செய்ய துவங்கினார்கள். ஏற்கனவே இருந்த தடைச்சட்டத்தைக் குறித்து கலக்கமுமடையவில்லை. கவலையும் படவில்லை இதுதான் திடப்படுத்தும் தீர்க்கதரிசிகளால் உண்டாகும் செயல்.

பார்த்தீர்களா! ஒரு தீர்க்கதரிசி முழுமையான செய்தியைக் கொடுக்கும்போது நிச்சயம் ஜனங்கள் செவிகொடுப்பார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு பயப்படுவார்கள்.

அக்காலத்திலே மற்றொரு கூட்டம் இருந்தது. அவர்கள் முந்தின சாலமோனின் ஆலயத்தைக் கண்டவர்கள். இப்பொழுது சிறை மீண்டவர்கள் போட்ட அஸ்திபாரத்தைக் கண்டபோது அவர்களுக்கு, ஆனந்தத்திற்கு பதிலாக அதிருப்திதான் வந்தது. ''இதிலென்ன கடக்குது விசேஷம் என்று அலுத்து கொண்டார்கள். ஆனால் ஆகாய் அப்படிப்பட்டவர் களின் அளப்புதலால் ஆலயப்பணிக்கு தாமதம் ஏற்படுகிறதை உணர்ந்து, தாகத்தோடு இறைவாக்கிற்காய் காத்திருந்தார்.

அவரின் இரண்டாவது செய்தியைப் பாருங்கள். இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்டவர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார்? இப்பொழுது இது உங்களுக்கு எப்படிக் காண்கிறது? அதற்கு இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாதது போல் காண்கிறது அல்லவா? முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (2:4,9)

மக்களினுடைய உள ஐயப்பாடுகளுக்கு உகந்த பதில் உண்டாகும்படி உரிய பதிலை கர்த்தரிடத்திலிருந்து பெற்று மக்களுக்கு விளக்க வேண்டியது தீர்க்கதரிசியினுடைய கடமை, எவன், என்ன நெனச்சா என்ன? நாம் தேவனுடைய வேலையைச் செய்வோம் என பொதுவாக சொல்லிவிடக் கூடாது. இந்தக் குறிப்பிட்ட காரியத்தைக்குறித்து தேவன் என்ன நினைக்கிறார்? என்பதைக் குறிப்பிட்டு தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும். இது தீர்க்கதரிசியின் கடமை.

ஆகாய் தீர்க்கதரிசியின் மூன்றாவது செய்தியைப் பாருங்கள். அது பரிசுத்தத்தைக் குறித்த செய்தி, ஆம் ! இறைவாக்கை எடுத்து சொல்லி பரிசுத்தத்திற்கு நேராக



ஜனங்களை நடத்த வேண்டியது தீர்க்கதரிசிகளின் கடமை. நான் சொல்லுவதை நன்றாய் கவனியுங்கள். மக்களை பரவசத்திற்குள் நடத்துவதல்ல பரிசுத்தத்துக்குள் நடத்துவதே தீர்க்கதரிசியின் கடமை.

இன்று பல தீர்க்கதரிசிகள் பரிசுத்தத்திற்கு பதிலாக பரவசத்திற்குள் மக்களை நடத்துவதில் வெகு அதிகமாகப் பிரயாசப்படுகிறார்கள். இப்படிச் செய்வதினால் தங்களைக் குறித்த பிரமாண்டமான நினைப்பை அவர்களுக்குள் விதைத்து விடுகிறார்கள். அவர்களும் பரவசத்தில் ஆழ்ந்து பரிசுத்தத்தின் வளர்ச்சியை மறந்து விடுகிறார்கள்.

கர்த்தர் தெய்வமானால் கர்த்தரைப்பின்பற்று, பாகால் தெய்வமானால் பாகாலைப் பின்பற்று, குந்திக் குந்தி நடக்காதே என்று சுட்டிக்காட்டுகிற தீர்க்கன் எலியாவைப் போன்றோர் நமக்குத் தேவை.

நீ ராஜாவாயிருந்தால் எனக்கென்ன? நீ செய்வது தவறு என்று சொல்லி, தன் தலையை இழக்க கொடுத்த யோவானைப் போன்ற தீர்க்கர்கள் நமக்குத் தேவை.

அக்காலத்திலே பாவநிவர்த்திக்கு வழி செய்தவரும் ஆசாரியன், ஆனால் ஜனங்களுக்கு பாவத்தைக் குறித்த உணர்வை ஊட்டியவர்கள் தீர்க்கதரிசிகள். இக்காலத்திலும் இந்த ஒருமைப்பாடு அவசியம் மேய்ப்பர்களும், போதகர்களும் மந்தையைப் பரிசுத்தமாக்க பிரயாசப்படுத்துகிறபொழுது தீர்க்கர்கள் ஜனங்களுக்கு அக உணர்வை ஏற்படுத்தி ஆயத்தப்படுத்த வேண்டும்.

ஆசாரியனாகிய எஸ்றா எருசேலமுக்கு வந்து ஆன்மீக எழுப்புதல் கொழுந்துவிட்டு எரியச் செய்தார். ஜனங்கள் அழுதுபுலம்பி தாமாகவே தவறுகளை களைந்து எறிந்தார்கள் என்பதெல்லாம் உண்மையானாலும், அதற்கான அடித்தளத்தை இட்டதுயார்? என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகாய், சகரியா ஆகிய தீர்க்கதரிசிகளே என்பது தெளிவாகப் புரியும்.

தீர்க்கதரிசிகளின் நான்காவது தனித்தன்மை, அவர்கள் கர்த்தரின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைப்பது (எஸ்.5:1) ஒரு தீர்க்கதரிசியானவன் தான் சொல்லுகிற வார்த்தை கர்த்தரிடத்தி லிருந்து வந்தது என்ற நிச்சயம் உடையவராக இருத்தல் வேண்டும். நீங்கள் சகரியா புத்தகத்தை வாசித்துப் பாருங்கள், வசனத்திற்கு வசனம் ''என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்று வருகிறதை உங்களால் காணமுடியும், வருகிறவருக்கெல்லாம் தீர்க்கதரிசனம் சொல்லுதல் என்பது வேடிக்கையான காரியம் விபரீதமான காரியம் ''கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி'' என்று வருகிறதை வேதத்தில் பலமுறை வாசிக்க லாம். தேவனுடைய வார்த்தை என்பது நமக்குள் உண்டாக வேண்டுமே தவிர நமக்குள்ளே உருவாக்கப் பட்டுவிடக்கூடாது.

இப்படிப்பட்ட திடீர் தீர்க்கதரிசிகள், திருவிழா தீர்க்கதரிசிகள், திசைமாறிய தீர்க்கதரிசிகள், கிறிஸ்தவ உலகத்திலே மிகப்பெரிய இடறலின் கல்லாய் இருக்கிறார்கள். பிரியமானவர்களே! தீர்க்க தரிசிகள் அவசியம். தீர்க்கதரிசனம் மேன்மையானது என்பது உண்மையானாலும் எல்லோரும் தீர்க்கதரிசிகளா? எல்லாமே தீர்க்கதரிசனமா? என்பதை நீங்கள் நிதானித்து அறிய வேண்டும்.

கிறிஸ்து - கள்ளக்கிறிஸ்து, பரிசுத்தாவி - அசுத்தாவி, போதகர்கள் - கள்ளப்போதகர்கள், அப்போஸ்தலர்கள் - கள்ள அப்போஸ்தலர்கள் என்று இருப்பது போலவே தீர்க்கதரிசிகள் - கள்ளத்தீர்க்கதரிசிகள் என்றும் உண்டு என்பதை நீங்கள் அறிந்திடல் வேண்டும்.

பொய்த்தீர்க்க தரிசிகள், கள்ளத்தீர்க்கத்தரிசிகள், விழுந்து போன தீர்க்கதரிசிகள் என்று பலவகைக் கூட்டத்தைக் குறித்து வேதத்தில் ஐயத்திற்கு இடமின்றி குறிக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்டவர்கள் மக்களை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். உளவியல் பூர்வமான ஞானம் சற்று அதிகமாகவே உண்டு. எதைச் சொன்னால் அழுவார்கள், எதைச் சொன்னால் விழுவார்கள், எதைச் சொன்னால் எழுவார்கள் என்பதை நன்றாக அறிந்து வைத்துவிட்டு அப்பாவிகளையும், ஆபத்தில் உள்ளவர்களையும் நீண்டகால அடிமையாக்கி விடுவார்கள். இப்படிப்பட்ட மனிதனைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.



ஆனாலும் ஆகாய், சகரியா போன்ற தேவனுடைய வார்த்தையை, வாக்குத்தத்தங்களை தேவன் விரும்பும் பரிசுத்தத் தை நமக்கு எடுத்துக்காட்டி நல்வழிப்படுத்துகிறவர்கள், இப்பொழுதும் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள், அவர்கள் கனத்துக்குரியவர்கள் நமது கவனத்துக்குரியவர்கள்.

ஆகாயினுடைய பெயர் எஸ்றா புத்தகத்தில், இரண்டே முறைதான் வருகிறது. சகரியாவின் பெயரும் அப்படித்தான். அதற்குமேல் அவர்கள் பெயரை எஸ்றாவில் எங்குமே காணமுடியவில்லை. தங்களுக்கு தேவன் கொடுத்த வேலையை மாத்திரம் செய்தார்களே தவிர தங்களுக்குப் பெயர் உண்டாக எந்த ஒரு காரியத்தையும் அவர்கள் செய்ய முற்பட வில்லை என்பது அதிமுக்கியம்.

தனக்கு கொடுக்கப்பட்ட வரத்தை மூலதனமாக வைத்துக் கொண்டு வருமானத்திற்கும், பெயர் பிரஸ்தாபத்திற்கும், உண்டான காரியங்களை செய்கிறவர்கள் உண்மையான தீர்க்க தரிசிகள் அல்ல. எனக்கன்பானவர்களே! நீங்கள் தீர்க்கதரிசியாக இருந்தால் உங்கள் செய்தி முழுமையானதாகவும் தேவ ஜனத்திற்கு பயனுள்ளதாகவும் தேவனுக்கு மகிமையுள்ள தாகவும் இருப்பதாக. நீங்கள் தீர்க்கதரிசியாக அல்லாவிட்டால் தீர்க்கதரிசிகளையும், தீர்க்கதரிசனங்களையும் நம்புங்கள். அதே சமயம் தீர்க்கதரிசிகளையும் தீர்க்கதரிசனங்களையும் நிதானித்து அறியுங்கள். அது நல்லது.

# 5

## செயல் வீரன் செருபாபேல் !

என்னை கர்த்தர் ஊழியத்திற்கு அழைத்த பொழுது சற்றும் யோசிக்காமல் முற்றும் ஒப்படைத்தேன். ஆனாலும் சற்று தயக்கத்துடன் இதை குறித்து என் தகப்பனாரிடத்தில் சொன்னேன். அவர் என்ன சொல்வாரோ என்ற அச்சத்துடன் நான் அவரை நோக்க, அவரோ சிரித்தமுகத்துடன் ''தாராளமாக நீ ஊழியத்திற்குப்போ அதுவும் இன்றைக்கே போ'' என்று சொன்னவர் மற்றொன்றையும் சொன்னார்.

என் வாலிப நாட்களில் சில வாலிபராக சேர்ந்து கிராமம் கிராமமாக ஊழியம் செய்தோம். அன்றைய என்னுடைய குடும்ப சூழலினிமித்தம் என்னால் முழுநேர ஊழியத்திற்கு வர இயலவில்லை என் வாஞ்சை நிறைவேறாமல் போயிற்று. ஆனால் என் தேவன் எவ்வளவு நல்லவர் என் முதல் மகனையே முழுநேர ஊழியத்திற்கு அழைத்துவிட்டார். ஆகவேதான் முழுமனதுடன் சம்மதிக்கிறேன்'' என்றார்.

இன்று என் தகப்பனார் எனது 30 ஆண்டுகால ஊழியத்தை மாத்திரமல்ல எனது மகனின் ஊழியத்தையும் கண்ணாரக் கண்டுகளிக்கிறார். கர்த்தரை துதிக்கிறார். நான் ஏதோ சுயபுராணத்தை எழுதிவிட்டேன் என்று யோசிக்காதீர்கள். ஒரு இரகசியத்தை சொல்லப் போகிறேன்.

சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்கள் எருசலேமிலே தேவாலயத்தை கட்டினார்கள். அதற்கு அஸ்திபாரம் போட்டதும்



அதன் பணியை முடித்து வைத்ததும் யார் தெரியுமா? செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல்.

யார் இந்த செருபாபேல் தெரியுமா? எஸ்றா புத்தகத்தில் இவனுடைய வம்சாவழி கொடுக்கப்பட்டுள்ளது. இவன் தாவீது வம்சத்தின் வழியில் வந்தவன். இன்னும் சொல்லப்போனால் மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற இயேசுவின் தாயாகிய மரியாளின் வம்ச அட்டவணையிலும், லூக்காவில் சொல்லப்பட்டிருக்கிற இயேசுவின் தகப்பனாகிய யோசேப்பின் வம்ச அட்டவணையிலும், இவரது பெயரை காண முடியும். அதாவது தாவீதுக்குப் பின் சாலமோன், நாத்தான் ஆகிய இரண்டு கிளைகள் இவரில் பிரிந்து யோசோப்பு, மரியாள் ஆகியோரின் கிளைகளாக வளர்ந்து இயேசுவில் இணைகிறது.

அதாவது செருபாபேல் என்பவன் இயேசுவின் அப்பா வழி தாத்தா மற்றும் அம்மா வழி தாத்தா என்று நாம் சொல்லலாம். இதைவிட முக்கியமானது அவன் தாவீதின் வேர்.

என்ன ஆச்சரியம் பாருங்கள். தாவீது கட்ட நினைத்தான். சாலமோன் கட்டி முடித்தான் அந்த ஆலயம் சிதைந்து போனபோது அதை கட்டியெழுப்ப தாவீதின் வழிதோன்றலயே தேவன் ஏற்படுத்தினார்.

ஆம், பிரியமானவர்களே! நீங்கள் கர்த்தருக்கென்றும், கர்த்தருடைய ஊழியத்திற்கென்றும் செய்கிற, எந்தவொன்றும் தலைமுறை தலைமுறையாய் நிலைத்திருக்கும். உங்களை நேசிக்கிற ஆண்டவர் தமது அன்பை உங்களோடு நிறுத்திக் கொள்வதில்லை. உங்கள் பிள்ளைகள் உங்கள் பேரப் பிள்ளைகள் கொள்ளுப் பேரப் பிள்ளைகள் என்று தலைமுறை தலைமுறையாய் நேசிக்கிறார் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு. உங்கள் கண் காணாத பேரப் பிள்ளைகளும் கர்த்தருடைய ஊழியத்தை செய்து உங்கள் பெயரை நிலைக்கப் பண்ணுவார்கள். சந்தோஷப்படுங்கள்.

செருபாபேல் என்பதற்கு பாபிலோனின் தளிர் அல்லது ''பாபிலோனின்குழந்தை'' என்று பொருள். பாபேல் என்பதற்கு

குழப்பம் என்று பொருள் எனவே குழப்பமான சூழ்நிலையில் பிறந்தவனென்று அர்த்தம் கொண்டாலும் தவறில்லை. எஸ்றா புத்தகத்தில் ''செஸ்பாத்சார்'' என்பது இவரையே குறிக்கும். செருபாபேல் என்பது இவரது இயற்பெயர் செஸ்பாத்சார் என்பது கல்தேய மொழிப் பெயர்.

உங்களுக்குத்தான் தெரியுமே நம்ம தானியேலுக்கே ''பெல்தெஷாத்சார்'' என்று இராஜா மாற்றிவிட்டார். அனனியா, மிசாவேல் போன்றோர்க்கு ''சாத்ராக், மேஷாக்'' என்று மாற்றப்பட்டது. அது போலத்தான் இதுவும் அதிகமாக குழம்ப வேண்டாம். இதில் சந்தோஷப்பட வேண்டிய செய்தி என்ன தெரியுமா? செருபாபேல் பாபிலோனிய, பெர்சிய ஆளுகையின் போது கவர்னராக இருந்தார் என்பது தான்.

ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு ஆயிரம்தான் துன்பம் வந்தாலும் அவர்களுடைய தலைமைத்துவ அழைப்பை யாராலும் முடக்க முடியாது.

யோசேப்பை விற்றுப் போட்டார்கள், அவன் போத்திபார் வீட்டில் தலைவன், சிறையில் போட்டார்கள் அங்கே அவன் வி.ஐ.பி. அடுத்து தேசத்தலைவன். தானியேலும் அப்படித்தான் அதைப்போலவே செருபாபேலும் கவர்னராக இருந்தார்.

தெய்வப்பிள்ளையே! சூழ்நிலை நிமித்தமோ, சூழ்ச்சி நிமித்தமோ, சூறாவளி நிமித்தமோ, சுனாமி நிமித்தமோ இடமாறி தடம் மாறி வந்திருக்கலாம். ஆனாலும் நீங்கள் இருக்கிற இடத்தில் நீங்கள் தலைவர்தான் சின்ன வேலையோ, பெரிய வேலையோ, சிறிய ஊழியமோ, பெரிய ஊழியமோ நீங்கள் கவர்னர் மறந்து விடாதீர்கள்.

செருபாபேல் தேவாலயத்தை கட்டும்படி எருசலேம் வருகிற பொழுது அவன் தன்னோடு கூட சேர்த்துக் கொண்டது யாரைத் தெரியுமா? ஆசாரியனாகிய யெசுவா, செயல் வீரனாகிய செருபாபேலுக்காக நான் கர்த்தரை துதிக்கிறேன். தன் அழைப்பிற்கு மிஞ்சின எந்த வேலையும் அவன் செய்ய வில்லை என்பது குறிப்பிட வேண்டிய விஷயம். கட்டுவதுதான்



நமது பணி, ஆலயப்பணி நடத்த வேண்டியது ஆசாரியன் என்று உணர்ந்து யோசுவாவோடு சேர்ந்தே செயல்பட்டான். இதுதான் செயல்வீரனின் சிறந்த அம்சம்.

எதற்காக வந்தானோ அந்த வேலையை கொஞ்சங்கூட தாமதப்படுத்தவில்லை. எருசலேம் வந்தார் வேலையை துவக்கினார் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டார். இதுதான் செயல்வீரனுக்கு இருக்க வேண்டிய அடுத்த தகுதி. ஆலயம் கட்டுகிறபணி. பின்னாளில் தடைபட்டதே அது எப்படி? என்று நீங்கள் கேட்கலாம். அதற்கும் செருபாபேல் செயலுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. தனது வேலையை அவர் ஒழுங்காகச் செய்தார்.

தடை வந்தபோது கவர்னர் வேலை பார்க்க பாபிலோனுக்கு ஓடிவிட வேண்டும். விரும்பினால் ஓடியிருக்கலாம். இன்று சிலர் அப்படித்தான் செய்கிறார்கள். கர்த்தருடைய ஊழியத்திற்கு வருவார்கள். கொஞ்சநாள் செய்வார்கள் இப்ப நிலைமை சரியில்லை கொஞ்சநாள் வேலை செய்துவிட்டு வாரேன்'' என்று சொல்லிவிட்டு புறப்பட்டு விடுகிறார்கள். தடை அகலும் கட்டியே தீருவேன். கர்த்தரின் ஆலயம் எழும்பி நிற்கும் என்று விசுவாசித்து இடத்தைவிட்டு விலகாமல் இருந்தவன்தான் செயல்வீரனாகிய செருபாபேல்.

அரசு தடை உத்தரவு அமலில் இருக்கிறது. அந்த வேளையில் தான் ஆகாய், சகரியா என்ற தீர்க்கர்கள் வருகிறார் கள். அவர்கள் உரைத்த தீர்க்க தரிசனத்தை சந்தேகப்பட வில்லை. எல்லாம் சரிதான் பொறுத்துது பொறுத்தோம். முறையா இராஜா வாபஸ் வாங்குகிற வரைக்கும் பொறுப்போம்'' என்றெல்லாம் சாக்கு போக்கு பேசவில்லை.

தீர்க்க தரிசிகளையும், தீர்க்க தரிசனங்களையும் அப்படியே நம்பினார். கர்த்தரையும் அவருடைய தீர்க்கதரிசிகளையும் நம்புங்கள். அப்பொழுது சித்தி பெறுவீர்கள் என்று யோசபாத் இராஜா சொல்வதுபோல செருபாபேலும் அவரது தீர்க்க தரிசிகளை நம்பினான்.

கர்த்தருடைய வார்த்தை வந்துவிட்டால் கருத்தில் எடுத்துக்கொண்டு களத்தில் இறங்குபவன்தான் செயல்வீரன் அந்த விதத்தில் செருபாபேல் தலைசிறந்தவன். இராஜா என்ன நினைப்பாரோ நமக்கு பாதகம் வந்து விடுமோ. கவர்னராக இருந்த நாம் களி சாப்பிட வேண்டிய நிலை வருமோ என்றெல்லாம் கலங்கவில்லை. செயலில் இறங்கினான் செயற்கரிய காரியங்களை செய்து முடித்தான்.

எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது ஒரு நாள் ஞாயிறு காலை ஆராதனைக்குப் புறப்பட்டு வருகிறேன் மதமாற்ற தடை சட்டம் இன்று முதல் அமலுக்கு வருகிறது. ஞானஸ்நானம் கொடுத்தால் கொடுத்தவருக்கு இத்தனை ஆண்டு சிறை. அன்று பகலிலே முன் குறிக்கப்பட்ட ஞானஸ்நான ஆராதனை எங்களுக்கு உண்டு, படித்துவிட்டு பத்திரிக்கையை வீசிவிட்டு வந்து விட்டேன். சபைக்கு வந்த ஒருவர் வேகமாய் வந்தார். ''பாஸ்டர் இன்னிக்கு ஞானஸ்நானம் வேண்டாம். உள்ளே போயிடுவீங்க'' என்று அன்பொழுகச் சொன்னார். எனக்கு பதில் வேகமாய் வந்தது. ஐயா! சும்மா இருங்க, வெளியே இருந்தா உங்களுக்கு பிரசங்கம், உள்ளே போனால் கைதிகளுக்கு பிரசங்கம் திரும்பி வரும்பொழுது ஜெயில் வார்டன் நம்ம சபைக்கு வருவார் என்று ஒரு போடு போட்டேன், அன்று ஞானஸ்நானம் நடந்தது. அதன் பின்னும் நடந்தது. அது இன்றும் நடக்கிறது. அது இன்னும் நடக்கும்.

நாம் இராஜ வம்சத்தார்கள், இராஜாவின் ஜெய கெம்பீரம் நமக்குள் இருக்கிறது. தேவனுடைய வார்த்தைகளை நம்புவோம். தீர்க்க தரிசனங்களை உறுதியாய் பற்றிக் கொள்வோம்.

ஏற்ற காலத்தில் கர்த்தர் தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு உற்சாகமூட்டுகிறார் உணர்வூட்டுகிறார். தேவன் ஒரு மனிதனை தெரிந்து கொள்ளும்போது அவனுடைய பெலவீனங்கள் ஒன்றும் அவர் கண்களுக்கு தெரிவதில்லை. அவர் எப்படி நினைக்கிறாரோ அந்த நினைவிலேயே அவனை பார்க்கிறார்.



செருபாபேலோடு இருந்த யோசுவா எனும் ஆசாரியன் அழுக்கு வஸ்திரம் தரித்திருந்தான். அதை ஆண்டவர் பொருட்படுத்தவில்லை. ஆனால் பிசாசு அதை பெரிதுபடுத்தி காட்டுகிறான் அவன் சொன்னான் என்பதற்காக யோசுவாவை தேவன் தள்ளிவிடவில்லை. மாறாக யோசுவாவுக்கு புதிய வஸ்திரம்.

பிரியமானவர்களே! உங்கள் குறைகளை பூதக்கண்ணாடி வைத்துப்பார்க்கும் சில சாத்தானின் ஏஜெண்டுகள் உங்களை குற்றம்பிடிக்க, தூக்கியடிக்க, சுற்றிவருவார்கள். கவலைப்பட வேண்டாம். முற்றிலும் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் பற்றியெறியும் அக்கினி மதிலாய் உங்களோடு கூட இருக்கிறார். உங்களை பரிசுத்தப்படுத்துவார். உங்களை பயன்படுத்துவார்.

தேவனுக்கென்று வைராக்கியமுள்ளவர்களை தேவன் எப்படியெல்லாம் உற்சாகப்படுத்துகிறார் தெரியுமா? பராக்கிரம சாலியே கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார் என்று சொன்னவர். தமது ஆலயத்தைக் கட்ட வைராக்கியம் கொண்ட செருபாபேலுக்கு இரண்டு வாக்குத்தத்தங்கள், இரண்டு தீர்க்க தரிசனம் மூலமாய் கொடுத்தார்.

1. செருபாபேலே உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன். ஆகாய் 2:23.
2. செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டது. அவன் கைகளே அதை கட்டி முடிக்கும் (சகரியா 4:9)

ஒன்று ஆலயத்தை கட்டுகிறவர்களுக்கான உத்திரவாதம் மற்றொன்று ஆலயத்தை கட்டுகிறவர்களுக்கான உயர்வு.

பிரியமானவர்களே! வியாதி, முதுமை இவைகளினிமித்தம் இந்த ஊழியம் இந்த வேலை. இந்த திட்டம் பாதியில் நின்று விடுமோ என்று நீங்கள் கலக்கத்தோடு இருப்பீர்களானால் உங்களுக்கு ஒரு நற்செய்தி. அரசு மூலமாகவோ, அந்நியர் மூலமாகவோ தடை ஏற்படுத்தப்பட்டு காரியங்கள் முடங்கிப்போய் இருக்கிறதோ? உங்களுக்கு ஓர் நற்செய்தி.

செருபாபேலுக்கு கொடுத்த அதே வாக்கை கர்த்தர் உங்களுக்கு தருவார். நீங்கள் துவங்கின, உங்கள் கைகள் துவங்கின காரியங்களை நீங்களே செய்து முடிக்கப் போகிறீர்கள்.

என் பணமெல்லாம் போச்சு, என் பெலனெல்லாம் போச்சு இது எப்படியாகுமென்று நீங்கள் அங்கலாய்ப்பதை என்னால் ஆவியில் உணர முடிகிறது.

என் அன்பு வாசகரே! ஆண்டவர் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தையை கவனியுங்கள். பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல. எனது ஆவியினால் ஆகும் (சகரியா 4:6) என்கிறார். கண்ணீரைத் துடையுங்கள். கவலையை விடுங்கள். கர்த்தருக்காக நீங்கள் விரும்புவதைக் கட்டியெழுப்புங்கள்.

கர்த்தருடைய கண்கள் செருபாபேலின் கையிலிருக்கிற தூக்கு நூலை ஆசையாய் பார்க்கிறது போல உங்களின் ஊழியப் பாதையில் நேர்மையாய் செய்ய நினைக்கிற சகல அசைவுகளையும் ஆசையாய் பார்த்துக் கொண்டு இருக்கிறது.

உங்களுக்கு வரும் எதிர்ப்புகளை, போராட்டங்களை, பெரும் கூட்டங்களைப் பார்த்து கர்த்தர் பேசுகிறார்.

பெரிய பர்வதமே! நீ எம்மாத்திரம் என் செயல்வீரனாகிய செருபாபேலைப் போன்ற இந்த மகனுக்கு முன்பாக நீ சம பூமியாவாய். செருபாபேல் சிறையிலிருந்து வந்து ஒரு பெருங் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி வந்து அவர்களை ஆலயப் பணியில் ஈடுபடுத்தி தனக்குமுன் வைக்கப்பட்ட உக்கிராணத்துவத்தை நிறைவேற்றி செயல்வீரனாய் இருந்தது போல நாமும் மாறுவோம். நானிலத்தை மாற்றுவோம்.

# 6

## உத்தமனாகிய எஸ்றா !

இந்தப் புத்தகத்தினுடைய முக்கிய பாத்திரமாகிய எஸ்றா மிகவும் விசேஷமானவர். நல்ல விசுவாசிக்கும் ஊழியருக்கும் முன்மாதிரியாக இவரது வாழ்க்கை அமைந்திருப்பது மாத்திரமல்ல. இவரது வாழ்வின் சில செயல்பாடுகள் கிறிஸ்து இயேசுவின் செயல்களுக்கும் ஒத்து இருக்கிறது.

பல காரியங்கள் இவர் மோசேக்கு ஒத்து இருக்கிறார். மோசே யூதர்களின் நன்மதிப்பை பெற்ற தலைவன், எழுத்தாளான், அருளுரையாளன் அதைப்போலவே எஸ்றாவும் யூதர்களிடையே மிக உன்னதமான நட்பை பெற்றிருந்த, எந்தக் குறையும் சொல்ல முடியாத நற்பெயரில் விஞ்சி நிற்கும் வெகுஜன தலைவராவார்.

நான் முன்னமே குறிப்பிட்டிருக்கிறபடி 1, 2 நாளாகமம் மற்றும் எஸ்றா ஆகிய புத்தகங்கள் இவரால் எழுதப்பட்டவை. இப்படி நல்ல எழுத்தாளன் மாத்திரமல்ல கவிஞனும் கூட. எபிரேய மொழியில் புலமை பெற்றவர். எபிரேய மொழியிலுள்ள எழுத்துகளுக்கு சமமான பகுதிகளாக பிரித்து பாடின கவிநயமிக்க போதக சங்கீதம் தான் 119ஆம் சங்கீதம்.

இவரைப் பற்றி இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம். நம்முடைய வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டு ஆகமங்களின் வரிசை கிரமமான தொகுப்பு இவரால் இவர் காலத்தில் தொகுக்கப்பட்டது. யூதர்களுக்கு எத்தனையோ

ஜெப ஆலயங்கள் உண்டு. ஆனால் அவற்றில் பெரியதும், முதலாவதுமான ஜெப ஆலயம் எஸ்றா காலத்தில், எஸ்றாவால் தான் உருவாக்கப்பட்டது.

யூதர்கள் 70 ஆண்டுகள் பாபிலோனில் சிறையிருப்பில் இருந்த காலத்தில் எஸ்றா அங்கே இருந்தார். அவர் வம்சா வழியின்படி தேவனுடைய ஆசாரியனாகிய ஆரோனுடைய வழியில் வந்தவர். பாபிலோனிலிருந்து ஆசாரிய வம்சத் தானாகிய எஸ்றாவுக்கு பாபிலோனிலே எந்தவித ஆசாரிய, லேவிய, ஊழியத்திற்கான பணி ஏதும் கிடையாது. பொதுவாக ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டு எப்படியாவது பிழைப்பை நடத்துவது தான் சிறைப்பட்டு போன மக்களின் வாழ்க்கை முறை, ஆனால் இந்த எஸ்றாவோ சிறையிருப்பின் காலத்திலேயும் தனது ஆசாரிய அழைப்பை வேத பிரமாணத்திற்கு அடுத்த காரியத்தை, சுத்த இருதயத்தை முழுமையாக காத்துக் கொண்டார்.

சிலர் காலம் மாறும்போது கோலத்தை மாற்றிக் கொள்கிறார்கள். சோறு கிடைத்து விட்டால் சொர்க்கம் கிடைத்து விட்டது போல சொக்கிப் போகிறார்கள். அரசு அந்தஸ்து ஏதாகிலும் கிடைத்து விட்டால், அழைப்பை மறந்து விடுகிறார்கள் அபிஷேகத்தை அசட்டை பண்ணுகிறார்கள்.

என் உள்ளத்தில் பதில் கிடைக்காத கேள்விகள் பல உண்டு. சிலர் விசுவாசிகளாகிற போது, ஊழியத்திற்கு வருகிற போது வீடு வாசலை விட்டு விட்டு சொத்து சுகத்தை தூக்கியடித்து விட்டு கர்த்தர் மாத்திரம் போதுமென்று வருகிறார்கள். ஆனால் கொஞ்ச காலத்தில் எவைகளை விட்டார்களோ, அவைகளை திரும்ப வாங்குவதுடன், விட்டு போல பத்து, பதினைந்து மடங்கு வாங்கிக் குவிக்கிறார்கள். தியாகத்தோடு வந்தவர்களெல்லாம், பண்ணையாளர்களாகவும், எஸ்டேட்டு முதலாளிகளாகவும் உள்ளார்கள்.

இப்பொழுதெல்லாம் பாஸ்டர்மார்கள் எத்தனை கிளை சபைகள் உண்டு என்று பெருமை கொள்வதை விட எத்தனை



பங்களாக்கள் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறார்கள். இவர்களெல்லாம் அழைப்பையும், அபிஷேகத்தையும் அலட்சியமாய் நினைக்கிற லௌகீக மோகத்தில் சிக்கிக் கொண்ட சிறுமதியாளர்கள்.

அந்நிய தேசத்தில் அடிமையாக அல்ல. அரசானல் புகழப்படுகிற இடத்தில் அரசாங்கம் கௌரவப் படுத்துகிற இடத்தில் எஸ்றா இருந்தார். அவரது வாழ்வும், செயலும் உன்னதமான தேவனுடைய ஆசரியனுக்குரிய அனுபவம் நிறைந்ததாய் இருந்தது. சிறையிருப்பின் தேசத்திலிருந்து ஒரு கூட்டத்தை பொறுப்பேற்று நடத்திக் கொண்டு, அரசரின் அனுகூலமான ஆணையோடும், ஆஸ்தியோடும் எஸ்றா புறப்பட்டு வருகிறார். அவர் வரும்பொழுது எருசலேமின் தேவாலயம் செருபாபேலாலே கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், ஆன்மீக விழிப்போ, எழுப்புதலோ, தூய்மையோ அங்கு இல்லை. அதனைக் கண்ட அவர் நொந்து கொண்டு தேவ ஜனத்தின் மன மாற்றத்திற்காக மறுமலர்ச்சிக்காக, மண்டியிட்டு மன்றாடினார், மக்கள் மனம் திரும்பினர்.

இன்றைக்கும் இந்திய திருச்சபைகள் பலவற்றின் நிலை இதுதான். அற்புதமான, அழகான ஆலய கட்டிடங்கள், பளிச்சிடும் பளிங்கு தரைகள், பார்ப்போரை திகைக்க வைக்கும் பலவண்ண திரைகள், அசத்தலான ஆசனங்கள், அட்டகாசமான இன்னிசை மற்றும் மின்னியல் கருவிகள் இத்தனை இருந்தும் ஒன்று மாத்திரம் மிஸ்ஸிங்..... எது? என்பதை யோசித்துப் பாருங்கள்.

எருசலேம் தேவாலயம் தேவனுடைய திட்டத்தின்படி தான் கட்டப்பட்டது. சத்துருக்களின் சதி வேலையை முறியடித்தவர் கர்த்தரே; ஆட்சியாளர் அனுசரனை புரிய ஆவியில் ஏவுதலை தந்தவரும் கர்த்தரே! செருபாபேலையும், யெசுவாவையும் நிலைப்படுத்தி, திடப்படுத்தி எழுப்பியவரும் கர்த்தரே!!! தீர்க்கர்களை எழுப்பி திருப்பணிக்கு உற்சாகப் படுத்தியவரும் கர்த்தரே... இப்படியிருந்தும் மனந்திரும்புதலும்,

தேவன் விரும்புகிற பரிசுத்தமும் அங்கு இல்லாமற் போனது ஏன்?

பொருட்கள் வாங்க பணமிருந்தது. கட்டியெழுப்ப ஆட்களின் பெலன் இருந்தது. உற்சாகமூட்ட தீர்க்க தரிசனம் இருந்தது. ஆனால் பரிசுத்தத்திற்குள் நடத்த நியாப்பிரமாண போதகம் இல்லை. காரணம் எஸ்றா அங்கே இல்லை.

இன்றைக்கும் பல ஊழியங்களில் பணம், படை, தீர்க்கதரிசனம் எல்லாம் இருக்கிறது. ஆனால் திருவசனத்தை உள்ளபடியும், நல்லபடியும் போதிக்க ஆட்களில்லை. எஸ்றாக்களை தேவன் எழுப்புவாரா இல்லை!... இல்லை!! நமது தலைவர்களை எஸ்றாக்களாக மாற்றுவாராக!

திட்டமாய் போதிக்கிற, தெளிவாய் போதிக்கிற, பகுத்து - வகுத்து ஆரோக்கியமான உபதேசத்தை பேசுகிற எஸ்றா போன்ற தலைமைத்துவம்தான் இன்றைய சபையின் தேவை, சமூகத்திற்கு தேவை.

ஒரு சிலருக்கு, ஒரு சில இடத்திற்கு பயன்படும்படி இதை நான் எழுதுகிறேன். எஸ்றா எருசலேம் ஆலயத்திற்கு வந்தபோது, நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா? எவ்வளவு சண்டை போட்டோம் தெரியுமா? இப்படி நாங்க கஷ்டப்பட்டு ஆலயத்தை கட்டினா நீ இப்ப வந்து சொகுசா சட்டம் பேசுறயே என்று யாரும் எஸ்றாவை கேட்கவில்லை என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

இப்படி உங்கள் ஊரிலும் நடக்கலாம், உங்கள் ஊரில் கட்டியெழுப்பப்பட்ட ஆலயத்திற்கு நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் வெகு பாடுபட்டிருக்கலாம் பணத்தை செலவழித்து ஒழுங்குபடுத்தியிருக்கலாம். இந்தக் கால கட்டத்தில் உங்கள் போதகர் மரித்துப் போனதினாலோ, மாறிப் போனதினாலோ புதிய போதகர் வருவாரானால் அவரை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டு அவருக்கு நன்மரியாதை அளித்திடுங்கள்.



அவரை எடுபிடியாக்கவோ, ஏய்க்கவோ, எள்ளளவும் இடங்கொடுக்காதீர்கள் சிறையிருப்பிலிருந்து வந்த மக்களுக்காய் கர்த்தரை துதிக்கிறேன். அவர்கள் எவ்வளவு நல்லவர்கள் தெரியுமா? எஸ்றா எவ்வளவுதான் பிந்தி வந்தவராக இருந்தாலும் எஸ்றா சொன்னதற்கும் வாஞ்சித்த தற்கும், இறைவனிடம் வேண்டினதற்கும் மேலாகவும் அதிவேகமாகவும் அவர்கள் செய்தார்கள்.

இப்படி செய்வதெல்லாம் தேவனுடைய வழிகளில் ஒருவிதம், பவுல் நடலாம், அப்பல்லோ நீர் பாய்ச்சலாம், செருபாபேல் கட்டலாம், எஸ்றா போதிக்கலாம். ஒவ்வொரு வரைக் கொண்டு ஒவ்வொரு விதமான காரியத்தை நடப்பிப்பதென்பது தேவனுடைய இரகசியம். யாரைக் கொண்டு வந்து தேவன் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட மனப் பக்குவம் இந்திய திருச்சபையினிடத்திற்கு வருமாயின் இரண்டே ஆண்டில் இந்தியாவில் எழுப்புதல் தீ கொழுந்து விட்டு எரியும். எஸ்றாவினுடைய பெயர் எஸ்றா ஆகமம் ஏழாம் அதிகாரத்திலிருந்துதான் வருகிறது. எஸ்றா புத்தகத்திற்கு வெளியே நெகேமியாவின் புத்தகத்தில் ஒரே ஒரு முறை மாத்திரம் வருகிறது. இப்படி குறைந்த அளவு குறிப்புகளே இவரைக் குறித்து வேதத்தில் காணப்பட்டாலும் மிக நிறைந்த அளவு தகவல்களை பரிசுத்த ஆவியானவர் அவைகளிலிருந்து நமக்கு தந்திருக்கிறார். இதோ! இனிவரும் பக்கங்களில் எஸ்றாவினுடைய நற்காரியங்களை மையமாக வைத்து தேவனுக்கடுத்தவைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. வேதத்தை ஆராய்கிறவன் :

எஸ்றா ஆகமம் 7:10ஐ வாசித்துப் பாருங்கள். இதற்கு இணையான வசனம் எஸ்றா 7:6லும் உண்டு, வேதத்தை ஆராயவும்... தன் இருதயத்தை பக்குவப்படுத்தி இருந்தான்.

வேதத்தை வாசிப்பது என்பது வேறு, ஆராய்வது என்பது வேறு நம்முடைய அருள்நாதர் இயேசு இந்த உலகத்தில் இருந்த நாட்களில் சொல்லிக் கொடுத்த பிரதானமான காரியங்களில் ஒன்று வேதத்தை ஆராய்வது.

''வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பவைகள் அவைகளே'' என்றும், ''வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.'' (யோவான் 5:39) என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

வேத வசனத்தை ஆராய்கிறவன் தேவனையும், தேவனுக்கடுத்தவைகளையும் சரியாக புரிந்து கொள்வான். அதனிமித்தம் அவனுடைய விசுவாசம் சுவாசமாக வீரியம் கொள்ளும்.

திருவசனத்தை வாசிக்கிறவனுடைய நடைகள் உறுதிப்படும். அதனால் வழுவாமலிருந்து நித்திய ஜீவனுக்கு பங்காளியாகிறான்.

கிறிஸ்துவுக்குள் வளருவது என்பது சுபாவம் மாற்றமடைவதைக் குறிக்கிறது. அதை மனம் புதிதாகிறதினாலே மறுரூபப்படுகிறது என்று வேத அடிப்படையில் சொல்லலாம். பேச்சு நடையில் சொல்ல வேண்டுமானால் நற்குணம் அடைவது என்று சொல்லலாம்.

வேத வசனத்தை ஆராய்ந்து பார்த்ததினால் பெராயா சபையார் நற்குணசாலிகளாய் இருந்தார்கள் என்று வாசிக்கிறோம். அதாவது எங்கே வேதத்தை ஆராய்ச்சி செய்கிறார்களோ அங்கே நற்குணசாலிகளாகிய மறுரூபமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

எஸ்றா சிறந்த பண்பாளனாக இருந்ததற்கு காரணம் அவர் வேதத்தை ஆராயும்படி தன்னை ஈடுபடுத்திக் கொண்டதுதான். ஈடுபடுத்திக் கொண்டிருந்தார் என்பதை விட தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தார் என்று வேதம் சொல்வதே மிகச்



சிறந்த வார்த்தை. வேதத்தை வாசிப்பது வேறு. ஆராய்வது வேறு. எங்கள் சபையில் வாரந்தோறும் வேதபாடம் நடக்கும். வேத ஆராய்ச்சி என்னும் பெயரில் பலர் வருவார்கள். கருகலான சத்தியங்களை விளக்கித் தருவேன் ஆனால் பரிதாபம் என்ன தெரியுமா? அடுத்த வாரம் நடத்தியதில் ஏதாவது கேள்விகள் கேட்டால் பாதிக்கும் மேற்பட்டோர் கொஞ்சங்கூட சரியான பதிலை சொல்ல மாட்டார்கள். காரணம் வேதத்தை ஆராய்வதையும் - தியானிப்பதையும் சிலர் சுமையாக கருதுவர், சிலர் கடமையாக கருதுவர்.

சுமையாக கருதுகிற ஒரு கூட்டமிருந்தாலும், அஃதினை சுகமாக கருதுகிற கூட்டமும் உண்டு. வேத புருஷர்கள் அதற்காகவே தேவனிடத்தில் விண்ணப்பஞ்செய்திருக்கிறார்கள்.

''கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்'' ஆலயத்தில் ஆராய்ச்சி செய்வேன் என்கிறார். (சங்.27:4) ஆலயத்தை அல்ல. சிலர் இதில்தான் அதிக நாட்டம் காட்டுகிறார்கள். எப்படி கட்டினார்கள்? எப்பொழுது கட்டினார்கள்? யார் பெயரில் வாங்கினார்கள்? எப்பொழுது ரிஜிஸ்டர் பண்ணினார்கள்? என்று ஆராய்ச்சி செய்வார்கள்.

கர்த்தருடைய புஸ்தகத்தில் தேடி வாசியுங்கள். அவற்றில் ஒன்றும் ஜோடியில்லாமல் இராது. கர்த்தருடைய வாய் இதை சொல்லிற்று. கர்த்தருடைய ஆவி அவைகளை சேர்க்கும் (ஏசா.34:16) என்று ஏசாயாவில் எழுதப் பட்டுள்ளதை சிந்தியுங்கள்.

கர்த்தருடைய வசனம் குறைவற்றது. அள்ள அள்ள குறையாதது. தேனைவிட மதுரமானது பேதையை ஞானியாக்குகிறது.

நான் முன்னே அறிமுகத்தில் சொன்னபடி எஸ்றா வாழ்ந்த காலத்தில் ஞானியாக விளங்கினார். அர்தசஷ்டா ராஜாவே ''உன்னிலுள்ள தேவ ஞானம்'' என்றும் மெச்சுகிறார். சாக்ரடீசு, கான்பூசியஸ் போன்ற தத்துவ ஞானிகளை பார்க்கிலும், எஸ்றா மெய் ஞானியாக விளங்கியதற்கு காரணம் அவரின், 'வேதத்தை ஆராய்ச்சி செய்யும் நற்பழக்கமே.

## உ. வசனத்தின்படி வாழ்பவன் :

எப்படியும் வாழலாம் என்று பலர்! இப்படித்தான் வாழ வேண்டுமென்று சிலர்! திட்டமிட்டு செயல்படுகிறார்கள் எஸ்றாவோ வேத வசனத்தின்படி நடக்க தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான்.

எல்லோராலும் வேத வசனத்தின்படி நடக்க இயலாது. இருதயத்தை பக்குவப்படுத்துபவர்களுக்கு வசனத்தின்படி நடப்பது என்பது சாத்தியம்.

இருதயத்தை பக்குவப்படுத்தாது சிலர் போதகராய் வருவதனாலும், இருதயத்தை பக்குவப்படுத்த விரும்பாத பலர் விசுவாசிகளாக இருப்பதினாலும், தான் துர்உபதேசங்கள் ஆங்காங்கே முளைத்தெழும்புகிறது. இப்படிப்பட்டவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாதவர் களாய் ஆத்துமாவிலே நசல் கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.

பிரியமானவர்களே! அவருடைய வசனத்தின்படி நடக்கிற மனிதனே பாக்கியவான். கர்த்தருடைய வசனத்திற்கு பல பெயர்கள் உண்டு. வேத வசனம், தேவ வசனம், கற்பனை, கட்டளை, வார்த்தை, சத்தியம், பிரமாணம், வழி, போதனை, என்றெல்லாம் கர்த்தருடைய வசனத்திற்கு பெயருண்டு. இப்படிப்பட்ட வார்த்தைகள் உள்ளடக்கிய வசனங்களை வாசித்துப் பாருங்கள். உங்களுடைய வாழ்க்கையில் அப்பியாசப் படுத்துங்கள். அப்பொழுது மகிமையான காரியங்களை உங்களது வாழ்க்கையில் காண்பீர்கள்.



இந்தப் புத்தகத்தின் தலைப்பு உத்தமனாகிய எஸ்றா என்பது. புறஜாதி மன்னனாகிய அர்தசஷ்டா எஸ்றாவை உத்தமனென்று மெச்சி மகிழ்கிறார். உத்தமனாக, ஊரறிந்த உண்மையாளனாக திருவசனத்திற்கு தன்னை ஒப்பு கொடுத்து அதன்படி நடக்க தன் இருதயத்தை பக்குவப்படுத்தி இருந்தான்.

வசனம் சொல்வதை உன்னிப்பாய் கவனியுங்கள். சத்தியத்தை கைக்கொள்கிற உத்தம ஜாதியே உள்ளே பிரவேசி கவனித்தீர்களா! சத்தியத்தை கைக்கொள்கிறவர்களே உத்தம ஜாதியாம் இதை மறந்துவிடக் கூடாது.

வாழ்க்கை வேறு, வசனம் வேறு என்று நினைப்பவர்களும் வாழ்பவர்களும் வருந்த வேண்டிய காலம் மிக சமீபமாய் இருக்கிறது எச்சரிக்கையாய் இருங்கள்.

சில பிரசங்கிமார்கள் மகா விவரமானவர்கள் மேடையிலே அபாரமாய் முழங்குவார்கள். ஆனால் நிஜ வாழ்வில் அப்படியே சத்தியத்தை விழுங்குவார்கள். சொல்வது ஒன்று செய்வதோ மற்றொன்று கள்ளத்தனம் உன் நெஞ்சில் மாறுவது என்று'' என்று... அவர்கள் பாடிய பாடல் வரிகள் தான் என் நினைவிற்கு வருகிறது.

''பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுவது போல'' என்ற தமிழ் பழமொழிக்கு ஒப்ப இடத்துக்கு இடம் தங்கள் நிறத்தையும், உபதேசத்தையும் மாற்றிக் கொள்ளுகிற ஊழியர்கள் புதுப்படையாக புறப்பட்டு விட்டார்கள். இவர்கள் உத்தமர்கள் அல்ல, திருவசன வியாபாரிகள். உண்மத்தர்கள் பாரம்பரிய சபைகளுக்கு போனால் ''என் அப்பா இந்த சபையில் தான் மரங்களை நட்டார். சாலைகள் போட்டார்'' என்று சரித்திரம் பாடுவார்கள். ஆவிக்குரிய சபைக்கு போனால் நான் பெந்தேகோஸ்தேகாரன் எனக்குள் ஓடுவது பெந்தேகோஸ்தே இரத்தம் என்று பீரங்கியைப் போல முழங்குவார்கள்.

நான் சொல்வது எங்கேயோ கேட்ட கதையல்ல சமீபத்திலே தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட கிறிஸ்துவ

நிகழ்ச்சியை பார்த்துவிட்டுதான் எழுதுகிறேன். தொலைக் காட்சியாக இருக்கவே என்னால் எதுவும் பேச முடியவில்லை. நேராக கேட்டிருப்பேனானால், ''நீ பெந்தேகோஸ்தேகாரன் என்பதை பிரசங்கத்தில் சொல்லாதே உன் வீட்டு கல்யாணத்தில் காட்டு'' என்று நேரடியாய் கேட்டிருப்பேன்.

வார்த்தையிலே வேதம், வாழ்க்கையிலே பேதம் என்ற நிலையில் நமது வாழ்வு அமைந்திடலாகாது. வெளிப்படுத்தின விசேஷம் கடைசி அதிகாரத்தில் ''இந்த தீர்க்கதரிசன வசனங்களை கைக்கொள்கிறவன் பாக்கியவான்'' (வெளி. 22:7) என்று எழுதப்பட்டுள்ளது. வேதத்தில் எத்தனையோ பாக்கியவான்களைப் பற்றி எழுதப்பட்டிருந்தாலும் திருவசனத்தின்படி நடக்கிறவனே பாக்கியவான் என்பதுதான் வேதம் கடைசியாக நமக்கு தந்திருக்கிற பாக்கியவான் அந்தஸ்து.

நான் உபதேசத்தைப் பற்றி இப்பொழுது பேச வரவில்லை. இப்போதைக்கு என் நோக்கம் அதுவல்ல. நான் சொல்ல வருவது எது என்றால் நாம் கற்று நிச்சயித்த ஒரே உபதேசத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழ வேண்டும். இரட்டை நாக்கு உள்ளவர்களாகவோ இரட்டை வேடம் போடுகிறவர்களாகவோ நாம் இருந்திடலாகாது.

தானியேலைப் பார்த்து நீ இடைவிடாமல் ஆராதிக்கிற தேவன் உன்னை தப்புவிக்க வல்லவராய் இருந்தாரா? என்று கேள்விக் குறியோடு நற்சாட்சியை பகிர்ந்து கொண்டது போல எஸ்றாவைப் பார்த்து, ராஜாவும் ''உத்தம வேதபாரகளே'' என்று சாட்சி கொடுப்பதிலிருந்து வசனத்தின்படி நடக்க எவ்வளவு ஒப்புக் கொடுத்தலோடு எஸ்றா வாழ்ந்தார் என்பதை உணர்ந்து சத்தியத்தின்படி நடந்து செயலாற்றுங்கள்.

### 3. திருவசனத்தை போதிப்பவன் :

எஸ்றா தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தார். எதற்கு தெரியுமா? நீதி நியாயங்களையும், கட்டளைகளையும் உபதேசிக்கும்படியாக கர்த்தர் அருளிய வேதத்தையும்,



பிரமாணங்களையும் நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் அவர்களுக்கு கற்றுத்தர வேண்டும்.

இது என்ன புதிதாக இருக்கிறது? என்று நீங்கள் கேட்க கூடாது. இப்படி செய்வது என் வேலை இல்லை என்று தட்டிக் கழிக்கக்கூடாது. இப்படி செய்வது உன் வேலை இல்லை என்று குட்டி உட்கார வைத்துவிடக் கூடாது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நமக்கு தந்திருக்கிற மாபெரும் கட்டளையின் பிந்திய பகுதியை சிந்தித்துப் பாருங்கள்.

நீங்கள் புறப்பட்டுபோய்... சீஷராக்கி... ஞானஸ்நானங் கொடுத்து... **நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணுங்கள்''** பார்த்தீர்களா! எவ்வளவு தெளிவாகயிருக்கிறது வசனம், ஆனாலும் அதெல்லாம் போதகரின் வேலை இல்லை என்று நீங்கள் சொல்வதும் ''அதெல்லம் எங்க வேலை வீணாக குழப்பாதே'' என்று போதக பிதாக்கள் சொல்வதும் என் காதில் விழத்தான் செய்கிறது. நான் ஒன்றும் பிரசங்க பீடத்தை பங்குபோட்டுக் கொள்ளவோ, பங்கு போட்டு கொடுக்கவோ சொல்லவில்லை.

ஒவ்வொரு விசுவாசியும் தான் கற்றுக் கொண்ட சத்தியங்களையும், தான் பெற்றிருக்கிற திவ்ய அனுபவங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எபேசு பட்டணத்திலே ஆக்கில்லா பிரிஸ்கில்லா, என்ற தம்பதிகள் இருந்தார்கள். தேவனுடைய மனிதனாகிய அப்பொல்லோ அந்த சபைக்கு வந்து பிரசங்கித்தார். அன்று அங்கு நடந்த சுவாரஸ்சியமான காரியத்தை வேதம் விவரிக்கிறது கவனித்துப் பாருங்கள்.

அப்பொல்லோ என்பவன் ஆவியில் அனலுள்ளவனாய் கர்த்தருக்கு அடுத்தவைகளை திட்டமாய் போதகம் பண்ணி வந்தான். ஆகில்லாவும் பிரிஸ்கில்லாவும் அப்பொல்லோவை

சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் விவரித்தார்கள். (அப் 18:24-26) இப்பொழுது ஓரளவிற்கு உங்களுக்கு புரிந்திருக்குமென நம்புகிறேன். அப்பொல்லோ மிகச்சிறந்த சாதுர்யபிரசங்கி ஆனால் அவர் யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்திருந்தனர். அதைப் புரிந்து கொண்ட ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அப்பொல்லோவிற்கு தெளிவாக மார்க்கத்தை போதித்தார்கள்.

போதிப்பதற்கு முன்பாக ஒன்றை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். மூளை அறிவை மூலதனமான வைத்துக் கொண்டு பேச தொடங்கிவிடக்கூடாது. நீங்கள் பேசுவதெதுவோ முதற்கண் உங்கள் அனுபவமாக இருக்க வேண்டும். ஆக்கிலாவும், பிரிஸ்கிலாவும் கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி ஞானஸ்நானம் பெற்றவர்கள் திருவசனத்தை வாழ்வில் அனுபவமாக கொண்டார்கள். அதனால்தான் அவர்களால் திட்டமாய் பிரசிங்கிக்க முடிந்தது.

எஸ்றா உபதேசித்தார் நீதி நியாயங்களை அவர் எடுத்து சொன்னபோது ஜனங்கள் உணர்வடைந்தார்கள். உடனே ஒப்புக் கொடுத்தார்கள். இது 100% சாத்தியமா? யோசித்துப் பாருங்கள். அழகாக, அட்டகாசமாக, அடுக்குமொழி நடையிலே திரு வசனத்தை விளக்க எண்ணற்றோர் உண்டு. இப்படிப்பட்ட பிரசங்கங்களால் நல்ல சொற்பொழிவு ''ஒன்றை கேட்டோம்'' என்ற மனநிறைவு உண்டாகிறதே தவிர மனமாற்றம் உண்டாவதில்லை.

மக்கள் எஸ்றாவின் வார்த்தையையும் கவனித்தார்கள் - வாழ்க்கையை கவனித்தார்கள். அவை இரண்டும் இணை வாகவும் - இசைவாகவும் இருப்பதை மக்கள் கண் கூட கண்ட படியால்தான் அவரின் வார்த்தைக்கு அடிபணிந்தார்கள்.

உபதேசிப்பதற்கு முன்பாக முதற்கண் நாம் பழக வேண்டும். அடுத்து மக்கள் முன் நடந்து காட்ட வேண்டும்.

எஸ்றா புத்தகத்தில் கடைசி அதிகாரங்களிலுள்ள சம்பவங்களை படித்துப் பாருங்கள். மகா வேதனையாகவும்,



வெட்கமாகவும் இருக்கிறது. அந்நிய ஜாதிப் பெண்களை மண முடித்துக் கொண்டது அவையோர் மாத்திரமல்ல ஆசாரிய வம்சத்தாரும்தான். இன்றைக்கும் அப்படித்தான் விசுவாசி களுக்கு ஒன்றும் நாங்கள் சளைத்தவர்களல்ல என்று சொல்லும் வகையில் ஊழியர்கள் சற்று அதிகமாகவே தரமிழந்து போகிறார்கள். வீண் வம்பு, விபச்சாரம், காவல் நிலைய படியேறுவது, கட்டப் பஞ்சாயத்து பண்ணுவது, இவைகளில் ஊழியர்கள் சிக்கி சீரழிவது வேதனைக்குரியது.

பிரசங்க பீடத்தில் நின்று மிகப் பிரமாதமாக பேசுகிற உங்கள் தலைமேல் இருக்கிற பரிசுத்த கிரீடம், நீங்கள் உடுத்தியிருக்கிற பரிசுத்த வஸ்திரம், சாயாமல், கிழியாமல், வேகாமல், விலகாமல் கறை படியாமல் இருக்கிறதா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

வழிகாட்ட வேண்டிய நாம் விழியிழந்து நிற்கலாமா? சற்று யோசியுங்கள். பாபிலோனிலே பட்டம் பவுசுகளை அனுபவித்து வந்த எஸ்றா ''பந்தா'' பேர் வழியாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் தன் இருதயத்தை பக்குவப்படுத்தி பரிசுத்தவானாக பாபிலோனை விட்டு வந்தார்.

பிரியமானவர்களே! நமது வாழ்வின் வளத்திற்காக வேதத்தை ஆராய்வோம், வளர்ச்சிக்காக அதன்படி நடப்போம், இறைமகக்கள் எழுச்சிக்காக நமது அனுபவபூர்வமான தேவ காரியங்களை உபதேசிப்போம்.

## 4. விசுவாசமுள்ள எஸ்றா

முன்னமே நான் குறிப்பிட்டு இருந்தபடி எஸ்றா பெர்சிய ராஜாவாகிய அர்தசாஷ்டாவாலும், அவனது ஏழு மந்திரிமார் களாலும், அங்கீகரிக்கப்பட்டவனாகவும், அனுப்பப்பட்டவனாக வும் எருசலேம் பயணத்தை தொடர்ந்தவன் எஸ்றா. வழிக்கும், வழிபாட்டிற்கும் எது தேவைப்பட்டாலும் எவ்வளவு தேவைப் பட்டாலும் எஸ்றாவிற்கு குறைவில்லாமல் கொடுக்க வேண்டு

மென்று வழி நெடுகவுள்ள கஜான்சிகளுக்கும் கவர்னர் களுக்கும் ராஜா கடிதம் கொடுத்திருந்தான், கட்டளையும் கொடுத்திருந்தான்.

இவைகளெல்லாம் ராஜாவாக முன்வந்து மனமுவந்து செய்தவைகள் எஸ்றா ஒன்றையும் வாயைத் திறந்து கேட்கவில்லை. மாறாக கேட்பதை வெட்கமாக கருதினான். வழியிலே சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணைசெய்யும் படிக்கு, நான் ராஜாவினிடத்தில் சேவகரையும் குதிரைவீரரை யும் கேட்க வெட்கப்பட்டிருந்தேன் (எஸ்றா 8:22).

எது வேண்டுமானாலும் கேள் இது ராஜாவின் வார்த்தை கேட்பதற்கு வெட்கம், இது எஸ்றாவின் நிலை. அவர் ஏன் கேட்க வெட்கப்பட்டார் தெரியுமா? அவர் ஏற்கனவே ஆண்டவரை பற்றி ராஜாவினிடத்தில் உபதேசித்தது அவர் மனக்கண் முன்னே வந்துவந்து போகிறது. ஆண்டவரைப் பற்றி அவ்வளவு வீராவேசமாக பேசிய நான் ராஜாவினிடத்தில் போய் கேட்டால் வெட்க கேடாய் இருக்காதா? என்று எஸ்றா யோசித்தான்.

எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார் மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும் அவருடைய வல்லமையும், அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லோர் மேலும் இருக்கிறதென்றும், நாங்கள் ராஜாவுக்குச் சொல்லியிருந்தோம்'' எஸ்றா 8:22.

இப்படியெல்லாம் சொல்லிவிட்டு மனித உதவியை மனிதனிடம் கேட்பது வெட்கமான காரியம் என்று எஸ்றா நினைத்திருந்தார். தான் சொன்னதை தேவன் கேட்டு தன்னை பாதுகாப்பார். என் தேவனுடைய வல்லமையை குறைத்து காட்டும் வகையில் மனிதனிடம் கேட்கக் கூடாது என்று எஸ்றா நினைத்தபடியால் தான் அவரை விசுவாசமுள்ளவன் என்று குறிப்பிட்டுள்ளேன்.

நமது ஆண்டவரைக் குறித்து எவை எவைகளை அறிக்கை யிடுகிறோமோ அவைகளை அவர் நம் வாழ்வில் செய்வா



ரென்று விசுவாசிக்க வேண்டும். அப்படி விசுவாசிக்கா விட்டால் ஒரு நன்மையும் நம்முடைய வாழ்வில் பெற்றுக் கொள்ள மாட்டோம் என்பது ஒருபுறமிருக்க நிச்சயமற்ற வர்களாய் ஓடு கிறவர்களுமாய் ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்களுமாய் இருப்போம் என்பதை நினைவில் வையுங்கள்.

சில ஊழியர்கள் கர்த்தர் போதிக்கிறவர் தம்முடைய ஊழியர்காரரை நடத்த வல்லவர். எனக்கு ஒத்தாசை வரும் பர்வதம் கர்த்தர் என்றெல்லாம் மேடையில் கர்ஜிப்பார்கள். பிரசங்கம் முடிந்தவுடன் எங்கே கடன் கிடைக்கும் என்று அலைவார்கள். அதிலும் ஒருபடி மேலே போய் விசுவாசிகளை தேடிப் போவார்கள்.

இப்படித்தான் ஒரு ஊழியர் ஒரு விசுவாசியிடம் கடன் கேட்டார். விசுவாசி தெளிவாக பேசினார். ''பாஸ்டர் என்னிடத்தில் பணம் இல்லை வேறு யார் கிட்டேயும் வாங்கியும் தரமுடியாது. ஏன்னா உங்களிடத்தில் கண்டிப்பு செய்து திரும்ப வாங்க இயலாது'' பாஸ்டர் சொன்ன பதில் என்ன தெரியுமா? பிரதர் யார் கிட்டேயாவது வாங்கிக் கொடுங்கள், மூன்று மாத தசமபாகத்தில் பிடிச்சுக்குங்க'' இதற்கு மேல் இந்த சம்பவத்தை நான் விவரிக்க தேவையில்லை. இந்த ஊழியனுடைய வார்த்தைகள் அவருடைய விசுவாசிகளால் மதிக்கப்படுமா? ஏற்றுக் கொள்ளப்படுமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

விசுவாசிகளே! உங்களுக்கும்தான் சொல்லுகிறேன். இயேசு நல்லவர், வல்லவர் போஷகர் யெகோவாயீரே என்றெல்லாம் பக்கத்து வீட்டுகாரியிடம் பகிர்ந்துவிட்டு, பத்துக்கும் ஐந்துக்கும் பல்லைக் காட்டிக்கொண்டு நின்றால் உன் தேவனைக் குறித்து என்ன நினைப்பார்கள் யோசித்துப் பாருங்கள்.

என்னை அழைத்தவர், அனுப்பினவர் காப்பார். நடத்துவார் என்ற விசுவாசம் நமக்கு தேவை. ஒரு கூட்ட ஜனத்தை அழைத்துக் கொண்டு ஆறுகளையும் நாடுகளையும் கடந்து 5

மாத பிரயாணத்திற்கு பிறகு ஆலயமிருக்கிற எருசலேம் வந்ததற்கு அடிப்படைக் காரணம் ஆண்டவருக்குள் அவருக்கிருந்த அசைக்கமுடியாத விசுவாசமே.

நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிந்திருக்கிறேன் என்று பவுல் சொல்லுகிறபடி நான் விசுவாசிக்கிற தேவன் யாரென்றும் அவர் எதையெல்லாம் நமக்கு செய்வாரென் பதையும் அறிந்து அவைகள் நமக்குள் பெருகும்படி விசுவாச அறிக்கை செய்ய வேண்டும்.

சாதகமான சூழ்நிலைகளைப் பார்த்து நம்புவது விசுவாச மல்ல. காணப்படாதவைகளின் நிச்சயம்தான் விசுவாசம். எனவே பிரியமானவர்களே உங்கள் கண்ணுக்கு புலப்படாத, உங்கள் புத்திக்கு எட்டாத காரியங்களை எதிர்பாருங்கள் அதில் எனக்கு உண்டாகும் என்று சொல்லுங்கள். அதுதான் விசுவாசம்.

எஸ்றா தனது வாழ்வில் இப்படிப்பட்ட நம்பிக்கையுடைய வனாக இருந்தான். வேத வசனங்களை ஆராய்ந்த அவன் வேத வாக்கியங்களில் சொல்லப்பட்டவைகளை நிறைவேற்ற அவர் போதுமானவர் என்று விசுவாசித்தான் வெற்றி கண்டான்.

## 5. ஜெபிக்கும் எஸ்றா :

''மனித பெலன் அது பலவீனம் தேவ பெலன் நம்மை பெலப் படுத்தும்'' என்று நாம் பாடுகிறபடி மனித பெலத்தை அல்ல தேவ பெலத்தையே எஸ்றா முற்றிலும் நம்பியிருந்தார். வேத அறிவு, ராஜ ஒத்தாசை ஆகியவற்றை மூலதனமாக எஸ்றா தன் வாழ்வில் வைக்காமல் ஜெப வாழ்வை தனது பெலனாக கருதினார். ராஜ ஒத்தாசையோடு நாட்களை கடத்திக்கொண்டு வசீகரமான வியக்கான வரத்தை வைத்துக்கொண்டு மக்களை கவர்ந்து இழுத்துக்கொண்டு தனது பாதையில் ஓடியிருக்க முடியும். ஆனால் அவரோ உபவாசிக்கிறவராகவும், ஜெபிக்கிற வராகவும், தேவ சமூகத்தில் விழுகிறவராகவும், அழகிறவராகவும் இருந்தார். இதோ சில வசனங்களை தருகிறேன்.



1. அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும் எங்கள் சகல பொருள்களுக் காகவும் செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும் நான் அங்கே அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறினேன். எஸ்றா 8:21.
2. அப்படியே நாங்கள் உபவாசம் பண்ணி, எங்கள் தேவ னிடத்திலே அதைத் தேடினோம். எங்கள் விண்ணப்பத்தை கேட்டருளினார். எஸ்றா 8:23.
3. ............''முழங்காற்படியிட்டு, என் கைகளை என் தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து எஸ்றா 9:5.
4. எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில் எஸ்றா 10:1.

ஊழியத்தில் வெற்றி பெற்றிட உலக வாழ்வில் உன்னத நிலை எய்திட உகந்த வழி ஜெபம் ஒன்றுதான். ஜெபிக்காதவன் வெற்றி பெறுவதில்லை என்பது மாத்திரமல்ல தானாகவே விழுந்து வீழ்ந்து போகிறான் என்பது குறிப்பிட்ட வேண்டிய விஷயம்.

பிரியமானவர்களே! ஜெபிக்கிற மனிதனுக்குத்தான் மனித தயவு உண்டாகும். சாதகமான சூழ்நிலைகள் சூழ்ந்து நிற்கும். ஜெபம் குறைய, குறைய பனி விலகுவது போல தேவ கிருபையும் மனித தயவும் நம்மைவிட்டு விலகிப் போய்விடும் கவனத்தில் வையுங்கள்.

எஸ்றாவுடைய ஜெபம் அவரையும் அவரோடு வந்தவர் களையும் காத்தது. அவர்களை எருசலேமுக்கு கொண்டு போய் சேர்த்தது. சிறையிருப்பில் இருந்து வந்த மக்களை சிந்திக்க வைத்தது. சீர் பொருந்த வைத்தது.

ஜெபத்தை மூலதனமான வைக்காமல் இன்றைய சபைகளில் பல டெக்னிக்குகளை பயன்படுத்துகிறார்கள். புதிய புதிய யுக்திகள், குழுக்கள், களியாட்டுகள், விளையாட்டுகள் எல்லாம் நல்லதுதான். அவைகள் மூலம் சில மாறுதல்கள் வளர்ச்சி இருப்பதுபோல் தோன்றும். நல்லதுதான் சபை வளர்ச்சி யென்பது புறம்பான வளர்ச்சி மாத்திரமல்ல, உள்ளான மனிதனின் வளர்ச்சி இன்னும் சொல்லப் போனால் திருவசனத்தில் தேறுவது. திருவசனத்தின் மேல் கட்டப்படுவது என்ற நிலை தான் உண்மையாள வளர்ச்சி.

எனவே சபை வளர்ச்சியின் அடிப்படையே ஜெபம் தான். ஜெபம் என்ற அஸ்திபாரத்தை சாராத எந்த வளர்ச்சியும் வளர்ச்சி அல்ல அது ஊது காமாலை கவனமாயிருங்கள்.

எஸ்றாவைப் போல் உபவாசிப்போம். ஜெபிப்போம். முழுங்காற்படியிடுவோம். கைகளை உயர்த்துவோம் கதறு வோம். கர்த்தரின் மகிமையை அப்பொழுது காண்போம் எப்பொழுதும் அதில் நிலைத்திருப்போம்.

### 6. ஞானமுள்ள எஸ்றா :

''நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின்படியே ஏற்படுத்துவாயாக'' (எஸ்றா 7:25)

எஸ்றாவுக்குள் இருந்த ஞானத்தை குறித்து ராஜா கொடுக்கிற சாட்சித்தான் இஃது. இந்த ஞானம் உலக ஞானமல்ல தேவ ஞானம் பரத்தின் ஞானம். நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து நம்முடைய மீட்பர் மாத்திரமல்ல. ''அவர் நமக்கு மீட்பும், ஞானமுமானார்'' என்ற வசன்தின்படி அவர் நமக்கு ஞானமாய் இருக்கிறார்.

அதைப்போலவே நாம் பெற்றிருக்கிற பரிசுத்த ஆவியான வருக்கு ஞானத்தின் ஆவி என்றும் பெயர் இருக்கிறது. ஞான பானம் என்றும் பெயர் இருக்கிறது. பரிசுத்த ஆவியின் வரங்களை குறித்து பவுல் எழுதுகிற பொழுது **''ஞானவரங்கள்''** என்று குறிப்பிடுகிறார்.



எனவே பிரியமானவர்களே, நீங்கள் கற்றவரோ, கல்லாதவரோ அதைப்பற்றி கவலையில்லை கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான் என்றபடி புதிய ஞானமும் அவனுக்குள் உண்டாகிறது. நம்முடைய ஆண்டவர் யார்? பேதைகளை ஞானியாக்குகிறவர் இந்த வார்த்தைகளின் படி நீங்கள் ஒரு ஞானி என்பதை நினைவில் வையுங்கள். நீங்கள் விஞ்ஞானியாக இல்லாமற் போகலாம். ஆனால் நீங்கள் மெய்ஞானி அதற்காக சந்தோஷப்படுங்கள்.

தேவன் தம்முடைய பிள்ளைகளை விசேஷித்த ஞானத்தால் நிரப்புகிறார். தேவ ஞானமுள்ளவர்கள் ஆளும் பொழுதும் தேவ ஞானம் பெற்றவர்கள் ஆளுகை செய்கிறவர்களின் பக்கத்தில் இருக்கும்பொழுது அங்கே அமைதலும் அறிவுசார்ந்த ஆட்சியும் நடைபெறும். தேவன் சாலமோனை ஞானத்தால் நிறைந்தவர். அதைப்போல யோசேப்பையும் தானியேலையும் நிறைந்திருந்தார்.

நீங்கள் தேவனுடைய ஊழியத்தில் பங்குகொள்ள விரும்புகிறீர்கள்? உங்களுக்கு தேவ ஞானம் அவசியம். ஆசரிப்பு கூடாரத்தின் பணிவிடைகளைச் செய்ய அகோலியாப்பையும் பெசெலேயேலையும் தேவன் ஞானத்தின் ஆவியினால் நிறைந்தார். அழிந்துபோகிற ஊழியத்திற்கே தேவ ஞானம் தேவையென்றால் மகிமையுள்ள ஊழியத்திற்கு எவ்வளவு ஞானம் தேவை என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

துரைமார்களையும், நியாயம் விசாரிக்கத்தக்க தலைவர் களையும் ஏற்படுத்த வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு எஸ்றாவுக்கு இருந்தது. உன்னிலுள்ள உன் தேவ ஞானத்தின்படி செய் என்ற ராஜா சொல்கிறார். எஸ்றா தேவ ஞானத்தின்படி தலைவர்களை ஏற்படுத்தினான். அதனுடைய பலன் என்ன தெரியுமா? உடனடி எழுப்புதல் முழுமையான எழுப்புதல்.

தலைவர்களே! தலைவர்களே! நான் சொல்வதைக் கொஞ்சம் சிந்தியுங்கள். தலைவர்களை ஏற்படுத்தும்முன் சற்று

சிந்தியுங்கள், உங்களுக்குள் ஞானம் இருக்கிறதா? இல்லையா? என்பதை நீங்கள் ஏற்படுத்துகிற தலைவர்களை வைத்தே கண்டுபிடித்து விடலாம்.

பெரிய கட்டிடங்களை வைத்திருப்பதினாலும் உங்களை குளிர்பதன அறையில் தங்க வைப்பதனாலும் பெரிய கவரில் காணிக்கை கொடுப்பதினாலும் நீங்கள் மதிமயங்கி தகுயில்லா தவர்களை தலைவர்களாக்கி விடாதீர்கள். இப்படிப்பட்ட தகுதியில்லாத தலைமைத்துவத்தினால் இம்சைக்குள்ளான இளம் ஊழியர்கள் எண்ணிக்கைக்கு அடங்காதவர்கள் இருக்கிறார்கள்.

என் அருமை வாசகர்களே! உங்களுக்கு ஒன்றை சொல்ல ஆசைப்படுகிறேன். நீங்கள் ஞானிகள், உங்களுக்குள் தேவஞானம் ஊற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? ஒரே ஒரு வசனத்தை தருகிறேன் வாசித்து விழிப்படையுங்கள்.

நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல் ஞானமுள்ள வர்களைக் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்'' எபேசியர் 5:15,16.

கனியற்ற அந்தகாரக் கிரியைகளை கடிந்து கொள்ளுங்கள். காலத்தை பிரயோஜனப்படுத்துங்கள். உங்களிலுள்ள ஞானம் உலகத்தோருக்கு தெரியும் வண்ணம் உன்னதமான ஒளி வீசிடுங்கள்.

## 7. உத்தமன் :

இந்த புத்தகத்தின் தலைப்பும் இப்புத்தகத்தின் அதிகாரமும் ''உத்தமனாகிய எஸ்றா'' என்பது இராஜா சொல்லுகிற பொழுது உத்தம வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியன் என்று குறிப்பிடுகிறார். மிக மதிப்புள்ள பொன்னையும், பொருளையும் இராஜா எஸ்றாவின் இடத்தில் கொடுத்ததற்கு காரணம் அவன் உத்தமனாக இருந்ததுதான்.



வார்த்தையிலே உத்தமன்
வாழ்க்கையிலே உத்தமம்
பணக்காரியத்திலே உத்தமம்
பணிவிடையிலே உத்தமம்
இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இராஜா கொடுத்தவைகளை ஆலய திருப்பணிக்கென எஸ்றா எருசலேமுக்கு அவைகளை கொண்டுவந்து சேர்த்தான். இன்று ஆலயப் பணிக்கென வாங்கப்படுகிற வசூலிக்கப்படுகிற பணமும் பொருட்களும் அதற்கென போய் சேராமல் வேறு (சொந்த) திட்டங்களுக்கு மாற்றி விடுவது வேதனைக்குரிய விஷயம்.

தேவன் நீதிமானை சோதித்து அறிகிறார். அந்த சோதனையில் உத்தமனென்று விளங்கிய பின்னர்தான் ஜீவகிரீடத்தை வழங்குவார்.

பிரியமானவர்களே! கிறிஸ்து வரும்பொழுது நம்மை உத்தமியே! என்று அழைப்பாராம். எல்லாம் இழந்த பின்னும் இரட்டத்தனையாய் திரும்ப பெற்றுக் கொண்டதற்கு காரணம் யோபு ஒரு உத்தமனாக இருந்தது.

நாத்தான்வேலைக் குறித்து சொல்லும் போது கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார் இயேசு. ''கபடு'' ஆராய வேண்டிய வார்த்தை. கபடு இல்லாதவர்கள், கபடாய் ஆணையிடாதவர்கள் உத்தமர்கள்.

அன்பு தெய்வப் பிள்ளையே! உங்கள் நாவு எப்படிப் பட்டது. அது சுத்த வெள்ளியா? அல்லது கபடு நிறைந்த கொள்ளியா? நீங்கள் மாற வேண்டும் மாறியே தீர வேண்டும்.

உண்மையாய் சொல்லுகிறேன். உண்மையாய் சொல்லு கிறேன் என்று பலமுறை சொல்லுகிறீர்களே அந்த கூற்று உண்மை தானா? அதிலே கபடு இல்லையா? சிந்தித்துப் பாருங்கள்.

புறாவைப் போல் கபடற்றவர்களாக நீங்கள் இருக்கிறீர்களா?

அன்பு ஊழியர்ளே! கர்த்தர் தந்த ஊழியத்தில், கர்த்தர் தந்த ஆளுகையில் நீங்கள் உத்தமர்களா? யோசித்து உங்களுக்குள்ளேயே பதில் சொல்லிப் பாருங்கள்.

★ மந்தையை இறுமாப்பாய் ஆளவில்லையா?
★ தற்பொழிவை நாடவில்லையா?
★ இழிவான ஆதாயத்தை இச்சிக்கவில்லையா?

இப்படி பல கேள்விகளை பரிசுத்த ஆவியானவர் கேட்டால் இல்லை ஆண்டவரே வேண்டுமானால் என் உத்தமத்தை தராசிலே நிறுத்துப்பாரும் என்று எசேக்கியா ராஜாவைப்போல் சொல்ல முடியுமா?

தேசம் தழுவிய எழுப்புதலுக்காக ஏங்குகிறோமே அதற்கான ஆசாரிய ஊழியத்தை உத்தமமாய் செய்தோமா? ஏதோ கிரீடத்தை வைத்துக்கொண்டு அங்கியை மாட்டிக் கொண்டு நான் ஆசாரியன், நீ இஸ்ரவேலன், நீ புறவினத்தான் என்று தத்துவம் பேசிக்கொண்டு அலைவதல்ல, அங்கியை கிழித்துக்கொண்டு அலறி துடித்திருக்கிறாயா?

உத்தம ஆசாரியனாகிய எஸ்றாவை கவனித்துக் பாருங்கள். தேசத்தில் நடக்கிற அருவருப்புகளை கண்டவுடன்.

1. கிழித்துக்கொண்ட வஸ்திரத்தோடும் எஸ்றா 9:5
2. அழுது எஸ்றா 10:1
3. தாழ விழுந்து கிடக்கையில் எஸ்றா 10:1

இப்படி தன்னை வருத்திக் கொண்டு ஆசாரிய பணி செய்கிறவன்தான் உத்தம ஆசாரியன் இப்பொழுதெல்லாம் சிலருக்கு அங்கி போட ஆசை வருகிறதே தவிர தேவ சமூகத்தில் விழவும், அழவும், ஆசை வருவதில்லை.

எங்கே தலைவர்கள் தங்களை தாழ்த்தி, இதயத்தை கிழித்துக்கொண்டு அழுது, புலம்பி, விழுந்து கதறுவதை மக்கள் காண்கிறார்களோ அங்கேதான் எழுப்புதல் நெருப்பு கவ்விப் பிடிக்கும். ஒரு மனிதனின் அழுகை ஒரு சமூகமே கதறும்படி செய்யும். ஒரு தலைவன் தேவ சமூகத்தில் காட்டுகிற மன துக்கம் ஒரு சமூகத்தையே மனம் மாற செய்யும்.



வாருங்கள் தெய்வப் பிள்ளைகளே!

★ வேதத்தை ஆராய்வோம்
★ வேதத்தின்படி நடப்போம்
★ வேதத்தை பிரசித்தப்படுத்துவோம்
★ வேத வசனத்தை விசுவாசிப்போம்
★ வேத ஞானத்தின்படி செயல்படுவோம்
★ வேதம் சொல்லும்படி ஜெபிப்போம்
★ வேதம் போதிக்கிறபடி உத்தம ஆசாரியங்களாய் உலா வருவோம்.

மொத்தத்தில் எழுப்புதல் தீவெட்டி உத்தம வேத பாரகனாகிய எஸ்றா எனும் ஆசாரியனைப் போல் வீறுகொண்டு எழுவோம்! விசுவாசத்தில் ஜொலித்திடுவோம்!

# 7

## எஸ்றாவில் கர்த்தரின் கரம் !

பழைய ஏற்பாட்டில் ஒரு நபருடைய சிறிய ஜெபம் வருகிறது. அந்த ஜெபத்தை இன்றளவும் எல்லோரும் விரும்பி சொல்கின்றனர். அந்த ஜெபத்தை செய்தவரைப் பற்றிய குறிப்புகளை அந்த ஒரு வேதப்பகுதியைத் தவிர வேதத்தில் எங்குமே காண முடியாது. அந்த நபரைக் குறித்து நமக்கு அவ்வளவு அதிகமாகத் தெரியாவிட்டாலும் அவரின் ஜெபம் அதிகமாகவே நம்மை பாதிக்கிறது.

1 நாளாகமம் 4:10 வாசித்துப் பாருங்கள், யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி; தேவரீர் என்னை ஆசீர்வதித்து என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக் கொண்டான். அவன் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார்.

யாபேஸ் என்ற மனிதனின் நான்கு வாக்கிய ஜெபத்தில் மையப்பகுதியைக் கவனித்துப் பாருங்கள். ‘உமது கரம் என்னோடிருக்க வேண்டும்; கர்த்தருடைய கரம் விசேஷமானது. நமது தேவனும் தமது வாக்குத்தத்தங்களில் தமது கரத்தோடு பலமுறை சம்மந்தப்படுத்தி சொல்லியிருக்கின்றார். மெய் பக்தர்களும், தங்களது விண்ணப்பங்களில் கர்த்தரின் கரத்தைக் குறித்து அதிகமாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மெய்யாகவே ‘‘கர்த்தருடைய கரம்’’ மகா உன்னதமான ஆசீர்வாதங்களை அளவில்லாமல் நமக்கு அள்ளித் தருகிறது.



அவரது கரம் தருகிற ஆசீர்வாதங்களை கொஞ்சம் குறைய எல்லா ஆகமங்களும் நமக்குத் தெளிவாய் விளக்குகிறது.

எஸ்றா ஆகமத்தை வாசித்த எனக்கு மிகப்பெரிய பிரமிப்பு உண்டாயிற்று. ‘‘கர்த்தருடைய கரம்’’ ஆறுக்கும் மேற்பட்ட முறை வருகிறது. அந்தக் கரத்தில் உண்டாகும் வெவ்வேறு விதமான ஆறு காரியங்களை அவைகளில் கண்டேன். கர்த்தருடைய கரத்தினால் உங்களுக்கு ஷேமம் உண்டாகும்படி அவைகளைப் படைக்கிறேன்.

**1. கேட்டது கிடைக்கும் :** எஸ்றா ஏழு ஆறில் கர்தருடைய கரம் அவன் மேல் இருந்ததினால் அவன் கேட்டவைகளை யெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்தான் என்று எழுதப் பட்டுள்ளது.

கர்த்தருடைய கரம் எந்த மனிதனோடிருக்கிறதோ அவன் வாழ்வு வித்தியாசமாக இருக்கும், என்ன ஒரு காரியம் தனக்கு வேண்டுமென்று விரும்புகிறானோ, விரும்பி எங்கே போகிறானோ அங்கே வாசல்கள் தாராளமாய் திறக்கும்.

ஏசா 45ல் இருப்புத்தாழ்ப்பாள்களை முறித்து வெண்கலக் கதவுகளை உடைத்து ஒளிப்பிடத்திலுள்ள பொக்கிஷங் களையும் மறைவான புதையல்களையும் உனக்குத் தருவேன் என்று ஆண்டவர் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

ஏதோ பூட்டை உடைப்பார், கோட்டையை உடைப்பார் என்று நீங்கள் எண்ணிவிடக் கூடாது. எது எங்கு கிடைக்காது என்று நாம் மலைத்து நிற்கிறோமோ எதை எவர் நமக்குத்தர மாட்டார்கள் என்று திகைத்து நிற்கிறோமோ அதை அந்த இடத்திலிருந்தே பெற்றுத் தருவதைத் தான் இந்த வசனங்கள் குறிக்கிறது.

எஸ்றா சிறையிருப்பிலிருந்து தாயகம் திரும்புகிறார். ‘‘தேவனுடைய கரம்’’ அவரோடு இருந்ததினால் அவர் கேட்டதையெல்லாம் ராஜா கொடுத்தார். கர்த்தருடைய கரம் உங்களோடு இருக்குமானால் தேவனுடைய வேலைக்காக

எதை எவரிடம் நீங்கள் கேட்டாலும் அதை அவர்கள் உங்களுக்கு வாரி வழங்குவார்கள். ஆனால் ஒரேயொரு நிபந்தனை கர்த்தருடைய கரம் உங்களோடு இருக்கத்தக்கதாக உங்கள் வாழ்க்கை இருக்க வேண்டும்.

**1. ''கர்த்தருடைய கரம்'' :** உங்களோடு இருப்பதை உங்களால் உணரமுடியுமென்றால் கவலையை விடுங்கள், நீங்கள் அரசு அலுவலகத்திற்குச் சென்றாலும், நீங்கள் கேட்கும் அனுமதி உடனே கிடைக்கும், வெகுமதி ஏதும் நீங்கள் தர வேண்டிய நிலை ஏற்படாது. கர்த்தருடைய கரம் எந்த மனிதனோடு இல்லையோ அவன் தான் கையிட்டு கொடுத்து காரியத்தை சாதிக்கிறார்கள். அப்படிபட்டவர்களுடைய வளர்ச்சி தீட்டான ஒன்றே, அவர்கள் சீக்கிரத்தில் சோர்ந்து போவார்கள், வீழ்ந்து போவார்கள்.

**2. அக்கரைச் சேர்க்கும் கரம் :** ''நாம் நாம் துணையென நயந்துரை சொன்னவர் நட்டாற்றில் விட்டாரையா'' என்ற பாடல் வரிகள் எனக்குள் இப்பொழுதும் பசுமையாக எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இயேசுவின் சீஷர் படகில் பயணித்த போது நடுக்கடலில் காற்றினால் அலசடிப்பட்டு அமிழ்ந்து போவோம் என்று தள்ளாடிக் கொண்டிருந்த வேளையில் ஆண்டவர் அங்கே வந்தார். அலைகடலை அமைதிப்படுத்தினார் படகை அக்கரையில் பத்திரமாய்ச் சேர்த்தார்.

நம்முடைய தேவன் யார் தெரியுமா? நம்முடைய லட்சியப்பயணத்தில் கூடவே வருகிறவர் இலக்கை அடையச் செய்கிறவர். ''வழியிலே உன்னைக் காக்கிறதற்கு நான் ஆயத்தமாக்கின ஸ்தானத்திற்கு உன்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கும் என் தூதனானவரை உனக்கு முன்னே அனுப்புகிறேன். (யாத். 23:20)

தேவன் செய்த வாக்கின்படி நமது ஒடுபாதையில் நமக்கு ஒத்தாசை புரிய அவர் எப்போதும் கரிசனையுள்ளவராய் இருக்கிறார். எஸ்றா முதலாம் மாதம் புறப்பட்டு ஐந்தாம் மாதத்தில் எருசலேம் வந்து சேருகிறார். ஏறக்குறைய



நூற்றைம்பது நாட்கள் பயணம் வழியில் மனிதர்களால், மிருக ஜீவன்களால் சீதோஷண மாற்றங்களால் எத்தனையோ இடுக்கண்கள் அவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் எஸ்றாவினால் சொல்லப்பட்டதை கவனியுங்கள். **''என் தேவனுடைய தயவுள்ள கரம்''** அவன் மேலிருந்ததினால் எருசலேமுக்கு வந்தான்''. அதாவது தேவனுடைய கரம் அவன் போய்ச்சேர வேண்டிய இடத்திற்கு பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்த்தது.

வியாதியோ, விபத்துகளோ, விஷப்பூச்சிகளோ கர்த்தருடைய கரம் நம்பட்சத்தில் இருக்கும் பட்சத்தில் நம்மை சேதப் படுத்த முடியாது. வியாதிகள் உங்களை பல்வேறு கேள்விகள் கேட்கச் செய்யலாம். உங்களுக்கு வந்த அதே வியாதியை அடைந்தவர்கள் இந்த உலகத்தை விட்டே போயிருக்கலாம். அவர்கள் வேறு, நீங்கள் வேறு. உபத்திரவத்தின் குகையில் உங்களைத் தேவன் தெரிந்து கொண்டாலும் 'உங்களுக்கு உபத்திரவம் உண்டு' என்று அவரே சொல்லியிருந்தாலும், அவருடைய கரம் உங்கள் மேல் இருப்பதை மறந்துவிடாதிருங்கள்.

உலகத் தோற்றமுன்னே உங்களுக்கென்று நித்திய திட்டத்தை வைத்திருக்கிறார். அது நிறைவேறுகிறவரை உங்களுக்கு எந்த சேதமும் கிடையாது. உங்களுடைய அழைப்பை நிறைவேற்ற உங்களுக்கிருக்கும் துடிப்பை விட அவருக்கு மிக அதிகமாகவே இருக்கிறது. அவரது பலத்த கரம் உங்களைப் பாதுகாப்பாய் கரை சேர்க்கும்.

**3. திடப்படுத்தும் கரம் :** திடப்படுத்துதல் என்பதற்கு பல்வேறு பொருள் இருந்தாலும், தைரியம் என்பதே இவ்விடத்தில் சொல்ல வேண்டிய உண்மைப்பொருள், அதாவது கர்த்தருடைய கரம் என்மேல் இருந்ததினால் நான் தைரியம் கொண்டேன் என்று எஸ்றா சொல்கிறார்.

பாபிலோனிலிருந்து எருசலேம் போக வேண்டும், அங்கே சில பொறுப்புகள் இவருக்குக் காத்திருக்கிறது, அங்கே மாத்திரமல்ல இங்கேயும் சில உத்திரவாதம் இருக்கிறது,

ராஜாவும் அவனது ஏழு மந்திரிகளும் எஸ்றாவை அங்கீகரித்து அரசப்பிரதிநிதியாகவே அனுப்பி வைக்கிறார்கள்.

ஒரு பக்கம் அரசாங்க பொறுப்பு, இன்னொரு பக்கம் ஆன்மீகப் பொறுப்பு இவைகளை எப்படி நிறைவேற்றுவது என்ற திகைப்பு.

என்ன ஆச்சரியம்! கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால் புது தைரியம் அவனுக்குள் வந்தது. அத்தோடு பல தலைவர்கள் அவனோடு சேர்ந்து கொண்டார்கள்.

இளம் ஊழியர்களே! இளம் விசுவாசிகளே! ஊழியத்திலும் சபையிலும் உங்களுக்கு அளிக்கப்படுகிற பொறுப்பை, பங்கை எப்படி நிறைவேற்றுவது? என்ற அச்சமா? கலக்கமா? கர்த்தருடைய கரம் உங்கள் மேலிருக்கிறதை எண்ணிப் பாருங்கள்.

தைரியம் கொள்ளுங்கள், என்னால் இதைச் செய்ய முடியும் என்று விசுவாச அறிக்கையிடுங்கள். எஸ்றாவோடு பல தலைவர்கள் சேர்ந்தார்கள், நன்றாய் கவனியுங்கள், தலைவர்களோடு எஸ்றா சேரவில்லை, தலைவர்களை எஸ்றா சேர்த்துக் கொண்டார். அதாவது தலைவர்களெல்லாம் எஸ்றாவின் தலைமைத்தத்துவத்தின் கீழ் வந்து விட்டார்கள்.

இதே அற்புதத்தை கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலும் செய்வார். வயது எவ்வளவு? என்பது முக்கியமல்ல. கர்த்தருடைய கரம் நம்மோடு இருக்கிறதா? என்பதுதான் முக்கியம். கர்த்தருடைய கரம் உங்களோடு இருக்குமானால் என் அன்பு வாசகர்களே! உங்கள் தலைமைத்துவத்திற்கு கீழே புதியவர்களும் பலவீனர்களும் அல்ல, தலைவர்களும் தரமானவர்களும் வந்து சேருவார்கள்.

**4. தயவுள்ள கரம் :** (8:18) ‘‘தயை’’ என்ற வார்த்தைக்கே N.I.V. என்ற ஆங்கில மொழிபெயர்ப்பில் ‘‘கிருபையுள்ள கரம்’’ என்றும் K.J.V. என்ற ஆங்கில மொழி பெயர்ப்பில் ‘‘நல்ல கரம்’’ என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. கர்த்தருடைய கரம் ஒரு மனிதன்மேல் இருக்குமானால் அவனை எப்பொழுதும்



கிருபை சூழ்ந்து கொள்ளும். நன்மையான காரியங்கள் அவனைத் தொடர ஆரம்பிக்கும்.

கர்த்தருடைய கிருபை ஒரு மனிதனோடு இருக்குமானால் அவன் விரும்புகிற வண்ணமாகவே சகலமும் நடக்கும். இந்த அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். தேவாலயத்துக்கு பணிவிடை செய்ய வேண்டிய உண்மையான லேவியரின் வாரிசுகள் கிடைக்கப்பட்டு பெயர் பதிவு செய்யப்பட்டனர்.

சில வேளைகளில் நமது குழுக்களிலும் சபைகளிலும் சம்மந்தமில்லா ஆட்களை நுழைய விட்டு, சங்கடங்களை அனுபவிக்கிறோம். ஆனால் எஸ்றாவிற்கு அந்தச் சூழ்நிலை வரவில்லை. புத்தியாகவும், பக்தியாகவும் சேவைபுரியும் ஒரு கூட்டத்தை எஸ்றா கண்டெடுத்ததுபோல கர்த்தருடைய கரம் உங்களோடு இருக்குமானால் அவருடைய தயையினாலே உண்மையுள்ள உடன் பங்காளிகளை நீங்கள் பெறுவீர்கள்.

**5. நன்மை செய்கிற கரம் :** (8:22) தப்புவிக்கிற கரம் (8:31) கர்த்தருடைய கரத்தின் மற்றும் இரண்டு செயல்பாடுகளை கவனியுங்கள். அது நன்மை செய்கிற கரம் மட்டுமல்ல சத்துருக்களுக்கும் பதிவிருக்கிறவர்களுக்கும் தப்புவிக்கிற கரம், அதைப்போலவே, வழுவிப்போகிற சகலர் மேலும் கோபத்தை இறக்குகிற கரம் என்பதை நீங்கள் முந்தி அறிய வேண்டும்.

சத்துருக்கள் என்றால் நேரடியாய் எதிர்த்து மோதுகிறவர்கள். பதிவிருக்கிறவர்கள் என்றால் மறைந்திருந்து தாக்குகிறவர்கள் அல்லது மறைத்து வைத்து தாக்குகிறவர்கள் என்று பொருள் உங்கள் ஆவிக்குரிய பாதையிலே இவர்கள் இரண்டு கூட்டமும் நிச்சயமாய் வருவார்கள். குடும்பத்திற்குள்ளேயிருந்தும் வரலாம், சபைக்குள்ளேயிருந்தும் வரலாம், ஊழியர்கள் மத்தியிலிருந்தும் வரலாம், அல்லது இவ்வகைகளைச் சாராதவர்களிலிருந்தும் வரலாம், என்ன சொல்வது, பிசாசு யாரைத் தான் விட்டு வைத்திருக்கிறான்.

உங்கள் கண்களுக்குத் தெரியாமலேயே ஒரு நிழல்யுத்தம் எழும்பலாம். கர்த்தருடைய கரம் உங்களை தப்பு விக்கப்

போதுமானது. இயேசு கிறிஸ்துவுக்கே பொய்சாட்சியை ஆயத்தம் செய்தது. ரோமப் பேரரசு அல்ல, பிரதான ஆசாரியர் களும் ஜனத்தின் மூப்பர்களும் தான். இப்படிப்பட்ட பக்திவேடம் பூண்டு கொண்டு குற்றமில்லாதவர்களை குழித்தோண்டிப் புதைக்கும் நாளொரு திட்டம் போடும் வேடதாரிகள் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவர்களால் உங்களைக் குறித்து தவறான தகவல்களை உங்கள் தலைமைக்கும், தங்கள் அன்புக் குரியவர்களுக்கும் தரமுடியுமே தவிர உங்கள் தலையிருக்கும் ஒரு முடியைக் கூட விழப்பண்ண முடியாது.

எனக்கன்பானவர்களே! என் நீதியின் வலக்கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்றவர் உங்கள் பட்சத்தில் இருக்கிறார் சிறையிலிருப்பிலிருந்த எஸ்றாவை சிறந்த வேதபாரகணாக்கி சீர்மிகு ஆசாரியனாக நிறுத்தி சிறையிலிருப்பிலிருந்து திரும்பியோரின் சிந்தனையை தெளிய வைத்து சீர்மிகு ஆன்மீக மறுமலர்ச்சியை கொண்டு வரச்செய்தது போல இந்த பரந்து கிடக்கும் பாரதத்தில் கர்த்தர் உங்களைப் பயன்படுத்தப் போகிறார்.

இதோ! அந்த நாட்கள் வந்து விட்டது. உங்கள் சொந்த மண்ணிலேயே மகிமையான பாத்திரமாய் தேவன் உங்களைப் பயன்படுத்தப் போகிறார். எஸ்றா என்றால் உதவி அல்லது உதவி செய்கிறவன் என்று பொருள். இதோ கர்த்தரிடத்தி லிருந்து உங்களுக்கு உதவி வருகிறது. நீங்களோ குடும்பங் களுக்கு உதவி செய்கிறவர்களாய் சபைக்கு உதவி செய்கிறவர் களாய், சமூகத்திற்கு உதவி செய்கிறவர்களாய் புதிய பரிணாமம் எடுக்கப் போகிறீர்கள்.

இது மட்டுமா இன்னும் சொல்கிறேன் கேளுங்கள். வேதத்தை வாசிக்கிறவர்களாய், அதன்படி செய்கிறவர்களாய் அதைப் போதிக்கிறவர்களாய் மாற்றுகிற புதிய அபிஷேகம் உங்கள் மேல் இறங்குகிறது. முதியோரானாலும் இளைஞரா



னாலும் ஆகாய், சகரியா போன்ற தீர்க்கதரிசிகளாக மாற இப்பொழுதே பரிசுத்த ஆவியின்வரம் உங்களை நிரப்புகிறது.

தொடங்கினதை முடிக்க **செருபாபேலுக்கொத்த செயல்வீரர்களாய், எழுப்புதல் தீவட்டி எஸ்றாக்களாய்** நீங்கள் மாற உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தரின் கரம் உங்கள் மேல் அமர்வதாக! அதை இப்பொழுதே உங்கள் உடலும், உள்ளமும், உணர்வதாக.

எழுப்புதல் என்றோ அல்ல, இன்றே வந்து விட்டது. எழுப்புதல் எங்கோ அல்ல, உங்களுக்குள் வந்து விட்டது. உங்களுக்குள்ளே வந்ததை உலகம் முழுவதும் உலா விடுங்கள்.

**மாரநாதா**

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**